
"MATHAR MARUMANAM,"

# மாதர் மறுமணம்



மலர் 3. இதழ் 9

பிரமாதி சித்திரை

Annas 1½. 10 Cts.

# "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய
உள்நாட்டுக்கு ... ரூ. 1—0—0

பர்மா, மலாயா, சைகோன், தென்னுபிரிக்கா முதலிய
வெளிநாட்டுக்கு ... ரூ. 1—8—0

தனிப்பிரதி ... ... ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பண மாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 1½ அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி

# உள்ளுறை


ஆண்குழந்தை தாலாட்டு (பாட்டு) C. N. விகடன் .... 1
பெண்குழந்தை தாலாட்டு (பாட்டு) C. N. விகடன் .... 2
மாதருலகம் —டர்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை .... 3
விதவா விவாகம் .... .... —சுப. .... 6
கொங்கு வெள்ளாள மக்களுக்கு ஒரு வேண்டுகோள் —R. T. ராமசாமி .... 10
மறுமணம் —குன்றை மு. பேத்தய்யா .... 12
ருஷ்யாவின் புனிதவதி .... .... .... 14
கேணி யருகில் .... .... —த. ரா. .... 17
கனகவல்லியின் காதல் —சோம. சட்டநாதன் .... 31
சமூகத் தீர்ப்பு .... .... —ப. நீ. .... 35
சிசு வளர்ப்பு .... .... .... 40
நிகழ்ச்சிகள் .... .... .... 41

# குமரன் புத்தகசாலை.

## வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள் (அறத்துப்பால்) | 1-0-0 |
| மெய்யறம் | 0-8-0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

## வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-0 |

## இதர புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| நைடதம் மூலமும் உரையும் | 4-0-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |
| தேவோபாசன தீபம் | 0-6-0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்) | 0-4-0 |
| இகபரஞானசாகரத் திரட்டு | 0-6-0 |
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1-0-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனார் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| இராமாயண ஆராய்ச்சி | 0 4-0 |
| சொர்னவல்லி | 0-12-0 |
| கூழைரங்கன் | 0-12 0 |
| அமிர்தவல்லிமாலை | 0-3-0 |
| நமது பலசரக்குக்கடை | 0-6-0 |
| நாயன்மார் | 0-3-0 |
| குட்டிச்சாத்தான் கட்டுரைகள் | 0-[illegible]-0 |
| பதிற்றுப்பத்தந்தாதி | 0-3-0 |
| மாதர்மறுமணம் | 0-4-0 |
| பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம் | 0-12-0 |
| மானநஷ்ட வழக்கு | 0-1-0 |
| ஜீவகாருண்யத் திருக்குறள் | 0-6-0 |
| ஜீவகாருண்யப்பாடல் திரட்டு | 0-3-0 |
| சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள் | 0-2-0 |
| கைம்பெண்ணின் கண்ணீர் | 0-1-0 |
| தேசீய கீதங்கள் | 0-2-0 |
| காசில்லாமல் உபதேசம் | 0-1-0 |
| பலதிரட்டு | 0-1-0 |
| கடவுளும் கோயிலும் | 0-1-0 |
| சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு | 0-4-0 |
| சைவசமய சாரம் | 0-1-0 |
| சுயராஜ்யம் யாருக்கு? | 0-1-0 |
| மாதர் மறுமணப் பாடல் திரட்டு | 0-2-0 |
| அநியாயக் கல்யாணம் | 0-0-6 |
| இரண்டு கட்டுரைகள் | 0-1-0 |
| தமயந்தி நாவல் | 0-8-0 |
| சோதிடப் புரட்டு | 0-2-0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | 0-2-0 |
| புராண ஆபாசங்கள் | 0-3-0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0-2-0 |
| சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் | 0-3-0 |
| சுயமரியாதைப் பாடல் | 0-2-0 |

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

மலர் 3 | காரைக்குடி பிரமாதி-ஹு சித்திரை-மீ | இதழ் 9


## ஆண் குழந்தை தாலாட்டு.

(C. N. விகடன்)

1. ஆராரோ ஆரிரரோ! ஆரிரரோ ஆராரோ!
ஆராரோ ஆரிரரோ! ஆரிரரோ ஆராரோ!

கல்விக்களஞ்சியமே! கட்டழகு வாய்ந்தவனே!
செல்வத் துரைமகனே! சீக்கிரம்நீ கண்ணுறங்கு!

2. கோயில் குளங்களென்று! கோளாறுச்சாமி யென்று!
ஓயாமற் சொல்லிமிக ஊர்களையே ஏமாற்றும்
சோலியைக்கொண்டுபெரு சோம்பேறித்தனம் வளர்க்கும்
போலிகளைப் போக்கவந்த புண்ணியனே கண்ணுறங்கு!

3. சாதிச்சண்டைபல சங்கடங்க ளுண்டாக்கும்
நீதியில்லா வீணரையே நீக்கவந்த நன்னிலவே!
சச்சரவுக ளொழித்து சமத்துவத்தை உண்டாக்க
இச்சகத்தில் வந்துதித்த இன்னிசையே கண்ணுறங்கு!

4. திவசமென்று தீர்த்தமென்று தீராத் திதிகளென்று
அவலங்கள் சொல்பவரை அகற்றவந்த அறிவொளியே!
மூடப் பழக்கங்களை முற்றும் ஒழித்துநலம்
நாடெங்குஞ் செய்யவந்த நாயகமே கண்ணுறங்கு!

5. சீர்திருத்தச் செந்தமிழே! செல்வக் களஞ்சியமே!
போர்புரியுஞ் சூரனைப்போல் பொன்னேநீ கண்ணுறங்கு!
மரகதத்தினி னழகே! மாமுருகன் தீந்தமிழே!
கரமெழுதாச் சித்திரமே! கண்மணியே தாலேலோ!

—

## பெண் குழந்தை தாலாட்டு.

(C. N. விகடன்)

1. ஆராரோ ஆரிரரோ! ஆரிரரோ ஆராரோ!
ஆராரோ ஆரிரரோ! ஆரிரரோ ஆராரோ!

படிப்பிற் சிறந்தவளே! பாட்டிற் கலைமகளே!
நடிப்பில் சிலைமகளே! நாயகமே! கண்ணுறங்கு!

2. செல்வத்துச் சீதேவி! செந்தமிழே கற்கண்டே!
கல்விக் கலையமுதே! கட்டழகு வாய்ந்தவளே!
பசுங்கிளியே நற்றேனே! பைந்தமிழே நவமணியே!
கொசுக்களணு காவலையுள் கோதைநீ கண்ணுறங்கு!

3. பெண்டாட்டி யிழந்தவர்க்குப் பேசிப்பல மணங்கள்
கொண்டாடிச் செய்பவரின் கொள்கைகளைச்சொல்லியிங்கு
புருடன்தனை யிழந்து புலம்பிவரும் பெண்தனக்கு
திருவார் மறுமணத்தைத் தீட்டவந்த நன்மணியே!

4. சொத்துரிமை கல்விகலை சுதந்தரமா தீரவீரம்
இத்தனையும் பெண்களுக்கு ஈயவந்த நல்லொளியே!
பெண்ணடிமை யென்றுசொலும் பேதையர்தாம் [ஓடினரே!
கண்ணுறங்கு கண்ணுறங்கு கற்பகமே கண்ணுறங்கு!

—

# மாதருலகம்

(தென்னாப்பிக்கா-டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை)

பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக இயல்பு. பழைய கொள்கைகள் அசட்டுத்தனமானவையென்று பட்டம் சூட்டப் பெறுதலும், புதிய கொள்கைகள் அனுஷ்டிக்கப் பெறுதலும் நாம் காணும் காட்சி. பழைய வழக்கங்களில் முழு நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் சீர்திருத்தக்காரர்களைக் கண்டு "நீங்கள் பித்தர்கள். நீங்கள் சொல்வதை அனுஷ்டானத்தில் கொண்டு வந்தால் உலகமே அழிந்துபோம்!" என்று சீறுவதும், சீர்திருத்தக்காரர்களோ இக்கூச்சலைக் கவனியாது தாங்கள் கோரிய மார்க்கத்திலேயே சளைக்காது செல்வதும் சர்வ சாதாரணம். சீர்திருத்தங்களின் அவசியத்தையும், சக்தியையும் மேன்மையையும், சிறிதேனும் கவனியாது "பழையன வாதலின் மேலானவை" என்னும் ஒரே நம்பிக்கை கொண்ட பழம் பெருச்சாளிகள் சீர்திருத்தக்காரர்களுடன் சண்டையிட்டுப் போர் புரிவதும், சீர்திருத்தக்காரர்கள் முட்டுக்கட்டைகளைக் கவனியாது பழைய வழக்கங்களைத் தள்ளி மிதித்திடலும், எங்கணும் பிரசித்தம். ராஜீய உலகிலும் சரி, சமூக விஷயங்களிலும் சரி, இதற்குக் காரணங்கள் துலங்கக் காணலாம். ஒவ்வோர் பிரச்னைக்கும் சாதக பாதக அபிப்பிராயங்களுண்டு. ஒன்று பிற்போக்கானதாயும், மற்றொன்று முற்போக்கானதாயும் இருக்கலாம். முற்போக்கானது முதலில் முன்னணியில் நிற்கத் தடைப்பட்டாலும் இறுதியில் வெற்றியே பெறும். இத்தகைய சிக்கலான பிரச்னைகளுள் மாதர் விஷயங்களும் ஒன்றாகும்.

உலகம் நாளுக்கு நாள் விருத்தியடைவதற்கும், ஆண் மக்கள் சந்தோஷ வாழ்வு பெறுவதற்கும் மாதர் இன்றியமையாதவர்கள். ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணாக உலக ஜனத்தொகை இருக்கிறது. விருப்பும் வெறுப்பும் ஆண் பெண் இருபாலார்க்கும் ஒன்றே. உலகினுக்கு ஆண் மக்கள் எவ்வளவு அவசியமோ, பெண் மக்களும் அவ்வளவு அத்யாவசியமானவர்களே. ஆதலின் ஒருவர் தாழ்வென்றும், மற்றவர் மேலானவர் என்றும் கருது

வது கூடாது. ஒழுக்க விதிகள் ஒருவர்க்கு ஒன்ருகவும், மற்ற வர்க்கு நேர்மாருனதாகவும் இருப்பது அநியாயமாகும். இரு பாலர்களின் அபிவிருத்தியும், நல்வாழ்வும் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டிருப்பதால் ஒருபாகம் தாழ்வுற்ருல் வேருென்று தாழ்வுறுவதும், ஒன்று அபிவிருத்தி யடைந்தால் வேருென்று அபிவிருத்தி யடைவதும் இயல்பே யாகும்.

மாதர் பிரச்னையைப்பற்றி ஆண் மக்கள் மட்டும் கவனிப்பது போதாமல் பெண்களும் விசேஷ கவனம் செலுத்த லவசியம். ஏனெனில் பெண்களின் குணங்கள், குறைகள், வேண்டுவன வேண்டாதன அனைத்தும் அவர்களுக்குத்தான் சரிவரத் தெரியும். மேலும் அவர்களுக்கும் சுய நிர்ணய உரிமையையும், நாம் தர கடமைப்பட்டிருக்கிருேம். அதனுல் ஆண் மக்கள் அதிக சக்தியும், உதவியும் பெற்றவர்களாகின்றனர். அன்றியும் நாம் கோரும் சமூக சீர்த்திருத்தங்களில் பற்பல நமது பெண்மணிகளின் பரிபூர்ண ஆதரவிருந்தால்தான் நிறைவேறும். மாதரின் அநுதாபமும் ஆதரவு மில்லாவிடில் ஆண்மக்கள் கோரி நிற்கும் சிற்சில சீர்த்திருத்தங்கள் ஈடேருமற் போவதல்லாமல் எதிர்பாராத தொல்லைகளும் நேருவது சகஜமாகிவிடும்.

நமது பெண்மணிகள் சீர்த்திருத்திக் கொள்ளவேண்டியன அநேகமுண்டு. கற்க வேண்டியதும் பலவுண்டு. பொது அறிவு பெற வேண்டியதும் வெகு வெகு அவசியமாகும். ஆதலின், பிற நாடுகளில் மாதர் நிலைமை, அந்தஸ்து, முன்னேற்றமடைந்துள்ள வழிகள், அவர்களின் மனுேபாவம் முதலியவற்றை நன்ருயறியவேண்டும்.பிறருடையநிலைமையைப்பற்றிய விவரங்களை யறிந்தால் நமது நிலைமை, குறைகளை எவ்வாறு சீர்த்திருத்திக்கொள்ள வேண்டும் என்பன சொல்லாமலே விளங்கும்.

உலகமாதர் நாளுக்கு நாள் முன்னேற்றப் பாதையில் செல்வதை நாம் காண்கிருேம். புதிய புதிய உரிமைகளுக்காகப் போராடுவதையும் கவனிக்கிருேம். கலா ஞானத்திலும் மானிட வாழ்வின் ,ஒவ்வோர் அம்சங்களிலும் சம அந்தஸ்து பெறவேண்டு

மென்று முயற்சிப்பதையும் கண்டுவருகிறோம். தங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களைப் போன்றுள்ள பழையகாலத்து மூடநம்பிக்கைகளையும் வழக்கங்களைவும் சிறுக சிறுகத் தள்ளியும் வருகின்றனர். ஆண் மக்களுக்கு இல்வாழ்க்கையில் உதவியும் சந்தோஷமுமளிக்கும், சக்திவாய்ந்த மாதர், உலக வாழ்க்கையில் உதவியளிக்கவும், பொது வாழ்வி லீடுபடவும் திற னுண்டென்பதையும் காண்பித்து வருகின்றனர். ஆதலால் மாதர் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்வெய்துவதன்னியில் அன்னார் வேண்டும் உதவியளிக்க ஆண்மக்கள் கடமைப்பட்டுள்ளார். மாதர் முன்னேற்றம் உலக முன்னேற்றமாகும்.

பிற நாட்டுப் பெண்கள் நிலையைக் கண்டு அந்நிலையை நமது சகோதரிகளும் அடைய எண்ணுவது பிசகு. உதாரணமாக ஐரோப்பியப் பெண்களின் மனோபாவத்திற் கேற்றதோர் திருத்தம் இந்தியப் பெண்மணிகளின் மனோபாவத்திற் கொவ்வாததா யிருக்கலாம். வேறு சில சீர்த்திருத்தங்கள் மனிதவர்க்கத்திற்குத் தீமை பயப்பனவா யிருக்கலாம். இவற்றை நாம் வெறுத்துத் தள்ளவேண்டும். மேலும், நம் நாட்டுப் புராதன பழக்க வழக்கங்களுக் கனுசரணையாகவே நாம் நமது வாழ்வைச் சீர்திருத்த முன் வரவேண்டும். நமது புராதனக் கொள்கைகள் அனைத்தையும் நாம் கைவிடவேண்டு மென்பதல்ல. நமது பழய வழக்கங்களையும், நமது நிலைமையையும், சீர்திருத்தங்களையும், பிற நாட்டினர் அநுபவங்களையும் ஒருங்கே யோசித்து எவ்வெவ்வற்றில் என்னென்ன நன்மையுண்டோ அவற்றைக் கொண்டு நமது வாழ்வைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டியதே முறைபாகும். புதிய கொள்கைகளை அனுஷ்டிக்க முன் வருகையில் குலதர்மிகளும், மதாபிமானிகளென்று சொல்லிக்கொள்வோரும் ஓலமிடுவர். ஆனால், காலச்சக்கரம் மகோன்னதமான சக்திவாய்ந்தது. அஃது சுழன்று சுழன்று காலப்போக்கையும் மனிதர் மனோபாவத்தையும் அடியோடு மாற்றிவிடும். இவ்வுண்மையை அனைவரு மறிதல் அவசியம்.

★

# விதவா விவாகம்.

(சு ப.)

விதவா விவாகம் சாஸ்திர சம்மதம் பெற்றதா? — இது ஒரு பெரிய கேள்வி. சாஸ்திரம் என்பது என்ன என்று அறியாதவர்களே, தங்களுக்குப் பதில் தெரிவிக்க இடமில்லாமற் போகுமிடங்களில் இந்த வெடிகுண்டைப் போட்டு, எதிரியைத் திகைக்க வைத்துவிடுவது ஒரு வழக்கம். விதவா விவாகப் பிரச்னையிலும் இதே முறைதான். ஆனால், விதவா விவாகம் வேண்டியது தான் என்று எப்பொழுது நாட்டில் கிளர்ச்சி ஆரம்பித்ததோ அன்று முதல் இக்கேள்விக்கு விடையிறுக்கப்பட்டும் வருகிறது. விதவா விவாகம் சாஸ்திர சம்மதந்தான் என்பதே அந்த விடை. பெரிய பெரிய சாஸ்திர விற்பன்னர்களெல்லாம், பழய சாஸ்திரங்களைப் புரட்டித் தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். எனினும், சாஸ்திரங்களில் விதவா விவாகத்துக்கு இடமில்லையென்ற வாதம் இடையிடையே கிளம்புவதைக் காண்கின்றோம்.

நெடுங்காலமாக விதவா விவாகத்தைக் கையாண்டு வரும் சமூகங்கள் இந்நாட்டில் எத்தனையோ இருக்கின்றன. அவற்றிற்கு சாஸ்திர சம்மதம் இருக்கின்றதல்லவா? விதவா விவாகத்தை அனுஷ்டிக்காத சமூகங்கள் ஒரு சில தான். பல சமூகங்களுக்குப் பொருத்தமான ஒரு வழக்கம், ஏன் இந்தக் குறிப்பிட்ட சில சமூகங்களுக்கு மட்டும் சாஸ்திர விரோதமானதா யிருக்கும்?

ஃ ஃ ஃ

காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரியார் நெல்லூரில் விதவா விவாகத்தைக் கண்டித்துப் பேசியிருக்கிறார். ஹிந்து கணவனின் அந்தஸ்து ஒரு குருவின் அந்தஸ்துக்குச் சமானமாகும்! அதாவது கணவன்—மனைவி, குரு—சிஷ்யை மாதிரி யென்பது. குருவும் சிஷ்யையும் தாம்பத்ய வாழ்க்கையை அனுஷ்டிக்கலாமா என்பது முதற் கேள்வி. அவளுக்கு ஒரு குருவுக்குமே லிருக்கக் கூடாதாம். குரு, சிஷ்யையின் இளம் பருவத்தில் இறந்துபோனால், வேறு குருவை அடையாமல் எப்படி அவள் குருவினிட மிருந்து கற்கவேண்டிய விஷயங்களைக் கற்பது? மறுமணம் செய்தால்

இரண்டாவது புருஷன் இரண்டாவது குருவாகிவிடுவானும்! அவள் சாவதுவரைக்கும் குருவே யில்லாமல் அறியாமையெனும் அந்தகாரத்தில் ஆழ்ந்து தவிப்பதா? இன்னொரு குருவை யடைந்து நற்கதி யடைவது சிறந்த தன்றோ?

ஃ ஃ ஃ

ஆண், பெண்ணுக்குக் குருவென்றும், பெண் ஆணுக்குச் சிஷ்யையாகவே யிருக்க வேண்டுமென்றும் எழுந்துள்ள இந்த குரு—சிஷ்யை பந்தம் எவ்வளவு பொருத்தமானது என்பதைக் கவனியுங்கள். நமது நாட்டில் கலைக்குக் கடவுளாக சரஸ்வதியை வைத்திருக்கின்றோம். அவள் ஒரு பெண் தெய்வமல்லவா? ஆண் தான் பெண்ணுக்குக் கற்பிக்க வேண்டும், குருவாக இருக்க வேண்டும் என்று கொள்ளப்பட்டிருந்தால், கலைத்தெய்வமாக ஒரு ஆண் கடவுளையன்றோ கொண்டிருக்க வேண்டும்? நம் நாட்டில் எத்தனையோ பெண்மணிகள் வித்தைகளில் சிறந்து விளங்கியதாகச் சரித்திர வாயிலாக அறிகிறோமே. இதிலிருந்து, பெண்ணும் குருவாக இருக்கத் தக்க யோக்கியதை உடையவள்தானென்பது விளங்க வில்லையா? ஆதலால், மனைவி தன் கணவனைக் குருவாகப் பாவிக்க வேண்டும்; அப்படிப் பாவிப்பதால், கணவனுகிய குரு இறந்துபோனுல், இன்னொரு கணவனைப் பெற முயற்சிப்பது இன்னொரு குருவைப் பெற முயற்சிப்பதுக் கொப்பாகு மென்று வழக்குப் பேசி விதவா விவாகத்துக்கு இடமில்லை யென்பது கொஞ்சமும் பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

ஃ ஃ ஃ

புருஷனுடையவும் மனைவியுடையவும் வாழ்க்கை ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் விதவா விவாகம் சாஸ்திர சம்மதமல்ல என்பது இன்னொரு விவாதம். யார் பிணைத்தார்கள்? புருஷனும் பெண்ணுமா? வேறு யாரேனுமா?—மனிதர்கள் தானே பிணைத்தது? மனிதர்கள் பிணைத்த பிணைப்பு அறுந்து போனுல், அதைத் திருப்பிப் பிணைப்பது நியாயமும் எளிதும் ஆகும். இல்லாவிட்டால் மனிதன் வாழமுடியாது. இல்லை, மனிதர் பிணைப்பது அல்ல தெய்வப் பிணைப்பு என்றுல் தெய்வப் பிணைப்பு ஏன் அறுந்துபோகின்றது! அறுமலிருந்தால், வித

வையென்றபெயரும் விதவா விவாகமும் ஏற்படக் காரணமில்லையே. நாமாகப் பார்த்து, பிணைக்கப்படுவோரின் சம்மதத்தைக் கூடக் கவனியாமல், ஏதோ மந்திர தந்திரங்களைச் செய்து கட்டி வைத்து விட்டு, அது தெய்வப்பிணைப்பு, பிரிக்கமுடியாதது, என்றெல்லாம் கதை கட்டுவது வெறும் ஏமாற்று வித்தையே தவிர வேறில்லை. தெய்வீகப் பிணைப்பு ஆணுக்குமட்டுமா? பெண்ணுக்கும் சேர்ந்ததா? பிரிக்கமுடியாத பிணைப்பு என்றால், புருஷன் மட்டும் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்துகொள்ள இடமிருக்கிறதல்லவா? அப்பொழுது இந்தப் பிரிக்கமுடியாத பிணைப்பு எவ்வாறு இடமளிக்கின்றது? கணவன் குருதானே? அவன் எத்தனை சிஷ்யர்களை (சிஷ்யைகளை) வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்! சிஷ்யை தான் இறப்பதுவரை ஒரு குருவிடமே 'உபதேசம்' கேட்டு வாழ்நாளைக் கழிக்க வேண்டும்!

ஃ ஃ ஃ

மேலே சொன்ன சாஸ்திர சம்மதம், பிரிக்க—முடியாத பிணைப்பு—இந்த விவாதங்களெல்லாம் தெய்விக விஷயங்கள். ஸ்ரீ சங்கராச்சாரியார் இதோடு நில்லாமல், லௌகீக விஷயத்திலும் தமது வாதத்திற்கு ஆதாரங் கண்டு பிடித்துவிட்டார். இந்திய ஜனத் தொகைக் கணக்கைப் பார்த்தால், ஆண்களைவிடப் பெண்கள் தொகைதான் அதிகமாம். ஒவ்வொரு இந்து விதவையும் மறுமணம் செய்தால், புருஷர்கள் தொகை அற்றுப் போய்விடுமே, அப்பொழுது பெண்கள் கன்னிகைகளாக அல்லவா வாழ நேரிடும்? இந்து சமூகத்துக்கே இது ஒரு பெரிய அவமானமாகவல்லவா போய்விடும் என்று அவர் கூறுகிறார். விதவா விவாகத்தைத் தடுத்துவிட்டால் இந்தத் தீமையேற்படாது; ஆகையால் ஒவ்வொருவரும் விதவா விவாகத்தைத் தடுக்கவேண்டியது என்று அவர் உபதேசிக்கிறார். பெண்களைவிடப் புருஷர்கள் தொகை அதிகமாக இருக்கிறது; எல்லாப் பெண்களும் இல்வாழ்க்கையிலீடுபடவேண்டுமானால் ஒரு புருஷன் பல மனைவியரைக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறதல்லவா? ஆனால் அதைப்பற்றி ஸ்ரீ சங்கராச்சாரியார் ஒன்றும் பேசவில்லை. விதவா விவாகம் நடந்தால் மட்டும், கன்னிப் பெண்கள் தொகை அதிகரித்துவிடு

ஸிந்து அசெம்பிளி உபதலைவி.

★

1939 பிப்ரவரி 25உ பிற்பகல் ஸிந்து அசெம்பிளி உபதலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமதி குமாரி ஜோதி சிபாயி மிலானி

—



மென்று சொல்கிறார். கன்னிகைகளாக வாழ்வது இந்து சமூகத்துக்கே அவமானம்! ஆனால், விதவைகளாக இருந்து சீரழிவது இந்து சமூகத்துக்குப் பெருமையா? 1931-ம் வருஷ ஜனத்தொகை கணக்குப்படி இந்தியாவில் விதவைகளின் தொகை 2,54,96,660. இவரில், 0 வயது முதல் 30 வயது வரையுள்ள விதவைகளின் தொகை 32,49,848. 0 முதல் 5 வயது வரையுள்ள விதவைகளின் எண்ணிக்கை 61,758. 5 முதல் 15 வயது வரையுள்ள விதவைகளின் தொகை 2,89,447. இந்தப் பெண்களெல்லாம் கன்னிகைகளா! அல்லது விதவைகளா? இந்தப் புள்ளி விவரங்கள் இந்து சமூகத்தின் உயரிய மகிமையை அல்லவா காட்டுகின்றன! இந்தச் சிறு பெண்களெல்லாம்—வாழ்க்கை யென்பதே யின்னதென்றறியாத இப்பெண்களெல்லாம் விதவைகளென்ற பட்டம் பெற்றது யாருடைய செயலால்? புருஷருடைய தொகை குறைவு என்கிறார். அப்படியானால் இளம்பருவமுள்ள, இல்வாழ்க்கையில் ஈடுபட விருப்பமுள்ள, விதவைப் பெண்களுக்கு மறு

மணம் புரிவதால் ஜனத்தொகை—அதன் மூலம் ஆடவர் தொகையும் அதிகரிக்குமல்லவா? ஜனத்தொகையில் ஏற்பட்டுள்ள இந்தக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கு சரியான வழி அதுதானே? அதை விட்டு விட்டு குழந்தை பெறும் சக்தியுள்ள, பருவமுள்ள பெண்களை மூலையில் ஒதுக்கி வைப்பதா அதற்குரிய வழி?

ஆகவே, எந்த முறைப்படி பார்த்தாலும், விதவா விவாகத்தின் அவசியத்தை யாரும் புறக்கணிக்கமுடியாது. சாஸ்திரங்களையும், குதர்க்க வாதங்களையும் குறுக்கே கொண்டுவந்தால் அவை தவிடுபொடியாகிச் சிதறிப் போகும். நாட்டின், சமூகத்தின், பெண் குலத்தின் நன்மையை நாடுபவர்கள் விதவா விவாகம் வேண்டாமென்று சொல்லத் துணியமாட்டார்கள். விதவா விவாகம் விரைவாக ஓங்குக!

கட்டுண்ட வாழ்வுவீ ணச்சுதடீ—அந்த
காலம் மலையேறிப் போச்சு தடீ!
—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

---

# கொங்கு வெள்ளாள மக்களுக்கு ஓர் வேண்டுகோள்

(R. T. ராமசாமி, போங்தியான்)

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! உலகில் மக்கள் எவ்வளவோ மேன்மையை அடைகிறார்கள். ஆனால், நம் சமூகத்தில் மட்டும் எவ்வளவோ கொடுமைகள் நடக்கின்றன. அவைகளை நீங்கள் கவனிக்காது மௌனம் சாதிக்கலாமா? 5 வயதுச் சிறுமிகளை 40 வயதுக் கிழவர்களுக்கு மணம் செய்விக்கிறார்கள். அந்தக் கிழவருக்கு பெண் சம்மதிக்காவிடினும், அதன் தாய் தந்தையர்கள் தங்கள் குடியைக்கெடுத்த நளின பாஷையில் "அவன் கிழவனாக இருந்தால் என்னடி? அவன் பெரிய கோடீஸ்வரன். அவன் இறந்துவிட்டாலும் நீ சும்மா உட்கார்ந்துகொண்டு சாப்பிடலாம்" என்று பலவாறாகப் புகட்டி அந்தப் பெண்ணை 40 வயதுக் கிழவனையே மணக்கும்படி செய்துவிடுகிறார்கள்.

பிறகு கொஞ்ச நாள் கழித்து அந்த வயோதிகன் இறந்து விடுகிறான். அந்தோ பரிதாபம்! அந்தப் பெண் தனக்குப் பருவம் வந்த காலத்தில் இன்பத்தை அனுபவிக்காது இருக்கிறாள். பணப் பேய் பிடித்த பெற்றோர்களால் அல்லவா இப்படி கஷ்டத்திற்கு ஆளாக நேரிடுகிறது?

பிறகு அந்தப் பெண் மறுமணம் செய்துகொள்ளலாம் என்றாலோ நமது குலத்துக்கு ஈனமாகிவிடும் என்று சொல்லுகிறார்கள். ஆண்கள்மட்டும் தாரமிழந்துவிட்டால் மறுதடவை மணம் செய்து கொள்ளலாம். அப்படி தாரம் இருக்கும்பொழுதே இன்னும் எத்தனையோ பெண்ணை மணம் செய்துகொள்ளலாம். அதனால் நம் குலத்துக்கு ஈனம் வராதாம்!

சிறுமியை வயது முதிர்ந்தவருக்கு மணம் செய்து கொடுப்பது: பிறகு அந்தப் பெண் விதவையாகப் போகிறாள். அந்தப் பெண்ணை மூதேவி என்றும், புருஷனைக் கொன்ற பாவி என்றும் இப்படி பலவாறாக தூஷித்து மூலையில் இருக்கச் செய்து இன்னும் பலவாறாக அந்தப் பெண்ணை இம்சிக்கிறார்கள். இவ்வாறு பல விதமாக தூஷிப்பது அழகா? (பனம் பழத்தின் மேல் காக்காய் உட்கார்ந்த கதையாக அல்லவா இருக்கிறது?) இன்னும் சில விதவைகள் தங்களுக்கு மறுமணம் செய்யாததினால் தீய வழியில் ஈடுபட்டு விடுகின்றனர். இன்னும் சில விதவைகள் தங்களுக்கு இஷ்டமான புருஷனைத் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கலாமென்றாலோ சாதியாசாரம் என்னும் முட்டுக்கட்டை குறுக்கே தடுக்கிறது. ஆதலால் இனியும் உறங்காது பால்ய விவாகத்தைத் தடை செய்வதன்றி விதவைகளையும் மறுமணம் செய்ய முன் வருவார்களாக.

# -: மறுமணம் :-

(குன்றை மு. பேத்தய்யா)

மலாயா மருதநாயகம் பிள்ளை என்றால் சிறு குழந்தை முதல் யாவருக்கும் தெரியும். அவர் ரொம்ப காலமாக மலாயாவிலே இருந்தாராம். அதனால் தான் அவருக்கு மலாயா என்ற கூட்டுப் பெயர் உண்டான தாம். அவரது புதல்வி சகுந்தலா மலாயாவிலே பிறந்தவளாம். அவள் பிறந்த நான்காம் வருஷத்தில் சொந்த ஊருக்கு வந்து விட்டார்களாம். இதெல்லாம் முன் நடந்தவை. இப்பொழுது சகுந்தலாவுக்கு வயது பத்து. மருதநாயகம் பிள்ளை சகதர்மிணியின் தம்பி நாகப்பன். அவனுக்கு வயது பதினைந்து இருக்கும். அவனுக்கு தாய் தந்தையர் காலஞ் சென்று விட்டதால் தன் அக்காள் வீட்டிலேயே இருந்து வந்தான். கலாசாலையில் நாகப்பன் எட்டாம் வகுப்பிலும், சகுந்தலா ஐந்தாம் வகுப்பிலும் வாசித்துக் கொண்டிருந்தார்கள். கலாசாலைக்குப் போனாலும் சரி, மாலை நேரங்களில் நந்தவனத்திற்கு உலாவச் சென்றாலும் சரி நாகப்பனும் சகுந்தலாவும் ஒன்றாகவே போவார்கள். இதைப்பார்த்த மருதநாயகம் பிள்ளையும், அவரது சகதர்மிணி செல்லம்மாளும், ஆனந்தக் கடலில் மூழ்குவார்கள். நாகப்பனுக்கு சகுந்தலாவையே மணமுடித்து விடுவதென்று தீர்மானமு மாயிற்று. நாகப்பனும், சகுந்தலாவும், ஒன்றாகத் திரிவதைப்பற்றி பொறாமைப்படும் கண்கள் எத்தனை? அப்பப்பா!

ஃ ஃ ஃ

காலச் சக்கரம் சுழலுகிறது. நாகப்பன் வாசிக்கும் வகுப்பில் சுப்பிரமணியம் என்ற பையன் ஒருவன் வாசித்துக்கொண்டிருந்தான். அவன் மருதநாயகம் பிள்ளையின் தூரபந்துக்களில் ஒருவனுங் கூட. சுப்பிரமணியமும், நாகப்பனும் இணைபிரியாத தோழர்களாயினர். ஆகவே நாகப்பன், சுப்பிரமணியம், சகுந்தலா, மூவருந் தான் எங்கே போனாலும் போகிறது வழக்கமாயிற்று; ஆனால் முன்னைப்போல இப்பொழுது, நாகப்பனிடம் சகுந்தலா, அதிகம் பழகுவதில்லை; பேசுவது மில்லை; எல்லாம் சுப்பி

ரமணியத் தோடேதான். இது நாகப்பனுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்ததாயினும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் யாவருடனும் நன்றாகவே பழகிவந்தான்.

சகுந்தலா கலாசாலைப் படிப்பை நிறுத்திக் கொண்டாள். மாலை நேரங்களில் நந்தவனத்தில், சுப்பிரமணியமும், சகுந்தலாவும் சந்தித்து வந்தார்கள்.

காலா காலத்தில் சகுந்தலா பருவமடைந்தாள். இரண்டு வருடங்களும் கடந்துவிட்டன. சகுந்தலாவுக்கு கலியாணப் பேச்சு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. ஒரு பக்கத்தில், மருதநாயகம் பிள்ளையும், செல்லம்மாளும், நாகப்பனை ஆதரித்தனர். இன்னொரு பக்கத்தில் சகுந்தலாவின் திரஸ்கரிப்பு. இதனிடையே நாகப்பன் காணமல்போனது அவர்களைத் திடுக்கிடச் செய்தது. பத்திரிகைகளில் எல்லாம் கண்டு பிடிக்கும்படி விளம்பரம் செய்தார். ஒன்றும் பயனில்லை. மூன்று மாதங்கள் கடந்து ஓர் சுபதினத்தில், சகுந்தலாவுக்கும், சுப்பிரமணியத்திற்கும் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. மருதநாயகம் பிள்ளையின் பெருமுயற்சியால் சுப்பிரமணியத்திற்கு ஒரு ஹைஸ்கூலில் ஹெட்மாஸ்டர் வேலை கிடைத்தது.

சகுந்தலாவின் துரதிர்ஷ்ட வசமாக சுப்பிரமணியம் தனது மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு பள்ளத்தாக்கில் விழுந்து விபத்து ஏற்பட்டதின் காரணமாக ஆஸ்பத்திரியில் ஜன்னி கண்டு, டாக்டர்கள் எவ்வளவோ சிகிச்சை செய்தும் சுகப்படாமல் இறந்துவிட்டான். இச்செய்தி கேட்ட சகுந்தலா புழுப்போல் துடித்தாள், அழுதாள். ஆவதென்ன? "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தே" பதினாறு நாட்கள் சென்றன. சகுந்தலாவின் நகை, நல்ல சேலை யாவும் பறிமுதல் செய்யப்பட்டு மூலையில் கிடத்தப்பட்டாள். இதெல்லாம் யார் வீட்டில்? தன் தாய் வீட்டில் தான். மருதநாயகம் பிள்ளை இறந்து மூன்று வருஷங்களும் ஆகிவிட்டன.

ஃ ஃ ஃ

ஒரு நாள் இரவு 7 மணி இருக்கும். மருதநாயகம் பிள்ளை வீட்டின் வாசலில் ஒரு பிச்சைக்காரன். குழிவிழுந்தகண்கள்; நிமிர்ந்து

நிற்கும் தாடி, பரட்டையான தலைமயிர், இவ்வளவும் கூடிய ஓர் வாலிப சங்யாசி பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். கையில் சிறிது சாதத்துடன் வெளியே வந்தாள் சகுந்தலா. சகுந்தலாவின் முகத்தைப் பார்த்த அப்பிச்சைக்காரன் 'சகுந்தலா' என்றான் தழுதழுத்த குரலில். 'யார்?' என்று கூறிக்கொண்டே செல்லம்மாள் அரிக்கன் லைட்டை எடுத்து வந்தாள். லைட் வெளிச்சத்தில் அப்பிச்சைக்காரனுடைய முகத்தைக் கவனித்த செல்லம்மாள் திடுக்கிட்டு "நாகப்பா" என்று அலறினாள். அவள் கையில் இருந்த அரிக்கன் லைட்டு தானே நழுவி தரையில் விழுந்து கண்ணாடி தூளாயிற்று. அவன் மனதில் முன் நிகழ்ந்தவை எல்லாம் புகைப் படம் போல தோன்றி மறைந்து கொண்டிருந்தன. சகுந்தலா நாகப்பனின் நிலைமையைக் கண்டு பொருமிக் கொண்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

நான்கைந்து மாதங்கள் சென்றன. அவ்வூர் "மாதர் மறுமண சகாய சங்க" கிளை ஸ்தாபனத்தின் உதவியால் அநேகப் பிரமுகர்களின் முன்னிலையில், சகுந்தலாவின் சம்மதத்தைப் பெற்றும், செல்லம்மாளின் சம்மதத்தைப் பெற்றும் நாகப்பனுக்கும், சகுந்தலாவுக்கும் மறுமணம் இனிதே நடந்தேறியது. இப்பொழுதெல்லாம் அக்கிளை ஸ்தாபனத்திற்குதம்பதிகள்பெருந்தொண்டாற்றுகிறார்கள்.

மறுமணம் ஓங்கிடில் மாநிலம் செழிக்கும்.

---

## ருஷ்யாவின் புனிதவதி

புரட்சி வீரனின் மனைவி கிருபசகாயாவை உலகம் என்றென்றும் மறக்கமுடியாது. சமதர்ம அமைப்பை நேர்ப்படுத்துவதற்காக அவள் ஆற்றிய தொண்டு அளப்பரியது. உழைப்பு— உழைப்பு ஒன்றையே அறிந்தவள். தொழிலாளர்கட்காக ஓயாது உழைத்தாள். சமதர்மக் கலையை வளர்த்தாள். ருஷ்யப் புரட்சியில் அவள் செய்த சேவையை ருஷ்யாவும் உலகமும் என்றும் மறவாது.

உலகப் பிரசித்திப் பெற்ற வீரப் பெண்மணிகளான பாஸ ஞோர்யா போன்றவர்களுக் கிடையிலே தோன்றி தனிச் சிறப் புடன் விளங்கினுள். லெனின் பொதுவுடைமை லக்ஷிய உலகில் தோய்ந்து இணைந்து நின்று சோவியத் கல்விக்காக அரும் தொண்டாற்றினுர். "லெனின் நினைவுகள்" என்று அவர் எழுதிய புத்தகத்தில் தம் கணவனைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிருள். அந்தநூலே அவரை உலகுக்குத் தெரியும்படி செய்த தெனலாம்.

பிடர்ஸ்பர்க் நகரக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே லெனினும் க்ருபசகாயாவும் சந்தித்தனர். 1895ம் ஆண்டில் லெனின் பிரிட்டிஷ் தொழிலாளருக்கு விடுத்த துண்டுப் பிரசுரத்தை வெளியிட அவர் உதவினுர். லெனின்—க்ருபசகாயா வின் இல்லற வாழ்க்கை மிக வறுமையில் நடந்தது. ஆச்சர்ய கரமாக நடத்தினர். ஆயினும் சந்தோஷகரமாக நடத்தினர். இவர் களின் வாழ்க்கை இளைஞர்களுக்கோர் எடுத்துக் காட்டாகும். நாடு கடத்தப்பட்டும் ஒளிந்து திரிந்தும் வீடின்றியும் வறுமையாலும் அல்லலுற்றனர் இருவரும். வாழ்க்கை யோடத்தைக் கவிழ்த்து வரும் வறுமைப் புயல்களை தைரியத்தோடு எதிர்த்தனர்.

இருவரும் ஒருமனங்கொண்டவர். வீண் விகடங்களும் வம் புச் பேச்சுகளும் அவர்களிடமில்லை. தீர்க்கமான ஆலோசனை யுடன் தெள்ளிய அறிவுடன் எல்லா பிரச்னைகளையும் அலசிப் பார்ப் பார்கள். விருந்து கேளிக்கைகளில் அவர்கள் மனம் செல்வ தில்லை.

எழுதும் கடிதங்களிலெல்லாம் சீரிய ஆராய்ச்சி; அரசியல் விமர்சனம். லெனின் புகழ் முதன் முதல் பரவியதற்குக் காரணம் மாணவ லெனின் 'சந்தைகள்' என்ருெரு வியாசமெழுதி அதி லோர் மார்க்ஸிய சாயமூட்டினமையே.

ஷ்ரோவிடைட் மகாநாடு நடைபெற்ற போது இருவரும் ஜர்ரின் போலிசுக்குத் தெரியாம லிருக்கவேண்டி மாற்றுடையில் வேஷம் மாறி வந்தனர். சட்டவிரோதமான, தடைப்படுத்தப்பட்ட துண்டுப் பிரசுரங்களை எங்ஙனம் பரப்புவது என்பதுபற்றி லெனின் விளையாட்டாகப் பேசினுர். இருவரும் ஒருவரை யொரு

வர் உணர்ந்து கொண்டனர். அன்றுதான் இருவர் இதயங்களும் ஒன்றின. அன்று முதல் 1924 வரை லெனின் இறக்குமட்டும் அவ் வன்புச் சங்கிலிகள் இணைந்தே நின்றன.

ருஷ்யாவின் புரட்சித் தாய்மார்களின் திலகம் கிருபசகாயா. அவர் லெனினுடைய கடிதங்களைத் தாமே வரைவார்; கடிதங்களுக்குப் பதில் வரைவார். நாடு கடத்தப்பட்டுப் பட்டினியுடனும் பசியுடனும் சைபீரியாவில் உழன்றபோது உறுதுணையாக இருந்த உத்தமி அவர்.

நாடு கடத்தப்பட்டு இங்கிலாந்து ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளில் வதிந்தபோது லெனின் தத்துவங்களில் மூழ்கி ருஷ்யப் பெண்களின் விடுதலை இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்தார்.

போல்ஷவிக் கட்சி அமைப்பிலும் வேலைப் பண்பிலும் தளரா ஊக்கங் காட்டினர் அவர். 1917 ல் சோஷியலிஸப் புரட்சிக்குப் பின் சோவியத் கல்வித் துறையில் தொண்டாற்றலானர்.

பொதுவுடமைக் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராக விருந்து ஸ்டாலினுடைய திட்டங்களை வளம் பெறச் செய்து பிற முதலாளித்துவ நாடுகளை விடப் பல மடங்கு ருஷ்யாவில் தொழில் மலியச் சேவை புரிந்திருக்கிறார்.

என்ன தியாகம்! என்ன சேவை! இம்மாதர் மாமணியின் பெயர் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்க தன்றோ! இறுதிவரைப் பொதுவுடைமைத் தத்துவத்திற்கும் கட்சிக்கும் பக்தி செலுத்திப் பல துறைகளிலும் அரும்பாடு பட்டார் கிருபசகாயா. அவரை உலகம் என்றும் மறவாது.

## விதவை கண்ணீர்

## வீட்டை அழிக்கும்

# கேணி யருகில்

(கு. ரா.)

சாமிநாதன் பி. ஏ. வகுப்பு மாணவன். மதுரை ஏ. எம். காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். வயது இருபத்து மூன்று. இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

எத்தனையோ பேர்கள் அவனுக்குப் பெண் தருவதாகச் சொல்லிவந்தார்கள். அவன் பெற்றோருக்கும் மகன் கல்யாணம் செய்து இன்புற வாழ்வதைக் கண்டு விட்டு உயிர்விட வேண்டுமென்ற ஆவல் தான். ஆனால் சாமிநாதன் ஏன் அவசரம் என்று சொல்லி நாட்களைக் கடத்தி வந்தான். இப்படி ஒரு வருஷம் கழிந்தது. சாமிநாதன் பி. ஏ. வகுப்பில் தேறிவிட்டான். தேறிய இரண்டாம் மாதம் மதுரை மில்லில் ரூபாய் முப்பது சம்பளத்தில் குமஸ்தா வேலையும் கிடைத்து விட்டது.

அப்புறம் கேட்பானேன்! பி. ஏ. பட்டதாரி; மாதம் முப்பது ரூபாய் சம்பளம்; இளம் வயது; நல்ல குடும்பம், இவ்வளவும் போதாதா பெண்களை ஈன்றெடுத்து விட்டு இருப்பதா இறப்பதா என்று ஏங்கி நிற்கும் நபர்களை ஆகர்ஷிப்பதற்கு? ஜாதகங்கள் வந்து குவிந்தன. ஜோசியர்கள் புரட்டிப் பார்த்தனர். எதிர் ஜாமீன்தொகை ஆயிரம் இரண்டாயிரம் என்று உயர்ந்தது. ஆயினும் சாமிநாதன் மனம் மட்டும் மாறவில்லை. ஏன் அவசரம் என்று முன்போலவே சொல்லி வந்தான். ஒரு வேளை கல்யாணச் சந்தையில் தனக்கு மதிப்பிடப்பட்டிருக்கும் விலை இன்னும் உயரலாமென்று நினைத்தானோ என்னவோ?

ஃ ஃ ஃ

பக்கத்து வீட்டில் புதிதாக ஒருவர் குடித்தனம் பண்ணவந்தார். சாமிநாதன் வீட்டுக்கும் அந்த வீட்டுக்கும் ஒரே கிணறு. கிணற்றை இரண்டாக வகுத்து நாகத்தகடு வைத்து மறைத்திருந்தது. கிணற்றடியில் உட்கார்ந்து குளிக்கும் போது மறுபக்கம் இருப்பவரை அரைகுறையாகக் காணலாம்.

வழக்கம் போல் காலை ஆறுமணிக்குச் சாமிநாதன் கிணற்றடியில் குளிக்கச்சென்று உட்கார்ந்தான். அதேசமயம் அடுத்த பக்கம் ஒரு அழகி இடுப்பில் இருந்த குடத்தை நிலத்தில் வைப்பதற்காகக் குனிந்தாள். இருவர் கண்களும் கூடி முட்டின. மறுகணம் அந்த அழகி நிமிர்ந்து தண்ணீர் இறைக்க வாரம்பித்தாள். அவள் கால்கள் மட்டும் சாமிநாதனுக்குத் தெரிந்துகொண்டிருந்தன. அந்த மிருதுவான இரு கால்களை நோக்கி சாமிநாதன் குளிப்பதாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தான். அடிக்கடி அவன் இருதயம் "அவள் யார்?" என்று கேட்டுக் கொண்டிருந்தது. காதல் கொண்ட இருதயத்தின் முதல் கேள்வி. அனுகூலமான பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும் கேள்வி. காதல் நாடகத்தின் முதல் அங்கம். அவன் இருதய அரங்கத்தில் ஆரம்பமாய் விட்டது.

ஃ ஃ ஃ

என்றும் முறை தவறாமல் காலை ஆறுமணிக்கெல்லாம் சாமிநாதன் கேணியருகில் ஆஜராவான். என்றும் அந்த அழகியும் அதே சமயத்தில் அங்கு வருவாள். இருவரும் கண்கள் மூலம் சம்பாஷித்துக் கொள்வார்கள். ஆனால் அந்த அழகியின் தேனொழுகும் மிருது பாஷையை மட்டும் கேட்டு அவன் செவிகள் இன்புற முடியவில்லை. அதற்குத்தகுந்த சௌகரியமும் சந்தர்ப்பமும் அவனுக்கு லபிக்க வில்லை.

இப்படி இரண்டு வாரங்கள் சென்றன. எப்படியாவது அவளோடு பேசித்தீரவேண்டு மென்று நினைத்தான். ஆனால் அங்கு வேறு யாராவது வந்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் பீதியும் அவனைச் சஞ்சலப்படுத்தின. காதல் பெருக்கின் தூண்டுதலால் அவன் ஏனைய இடையூறுகளை அற்பமாக மதித்தான். எப்படியாவது அவளிடம் பேசியே தீரவேண்டுமென்ற சங்கல்பத்தோடு அன்று கேணிப்பக்கம் சென்றான். அவளும் வந்தாள். கண்கள் கூட்டி முட்டின. ஆனால் பாவம்! சாமிநாதனால் ஒன்றும் பேச முடியவில்லை. இப்படி சம்பாஷணையை ஆரம்பிக்க வேண்டும்; அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆகாயக் கோட்டைகள் எல்லாம் அடிஸ்தானம் இளகி நிலமட்டமாய் விழுந்தது. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. காதல்

காக்ஷிகளில் நாயகி நாயகர்கள் கொட்டி யளக்கும் சொன்மாரிக ளில் ஒன்று கூட அவனுக்குத் தோன்றவில்லை. அவள் கால்களை நோக்கி அசைவற்று இருந்தான். தண்ணீர் இறைத்து முடிந்ததும் குடத்தைத் தூக்குவதற்காக அவள் குனிந்தாள். மீண்டும் கண்கள் சம்பாஷித்தன. அவ்வளவு தான்! அவள் கேணியை விட்டுச் சென்றதும் பெருமூச்சு விட்டான் அவன்.

அவன் எவ்வளவோ யோசனை செய்து பார்த்தான்; ஒரு வழி யும் நடைமுறைக்குத் தகுந்ததாகத் தோன்றவில்லை. எப்படிப் பேசு வது? எந்த ரீதியில் சம்பாஷணையை ஆரம்பிப்பது? என்றெல்லாம் நினைக்க ஆயிரம் வழிகள் தோன்றும் அவனுக்கு. ஆனால் அந்த வழி கள் அனைத்தும் அவனுடைய கற்பனை உலகில் மட்டில் பொருத்த மானவை; நாம் தினசரி பழகும் உலகில் அவை நடைபெறக் கூடி யனவல்ல. இந்த நிலைமையில் அவன் நாட்களைச் செலுத்திவந் தான்.

ஃ ஃ ஃ

அவன் நிலைமை அப்படி. ஆனால், அவளோ பெண்ணின் மனத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அவளும் அவன் பேரில் பிரேமை கொண்டிருந்தாள். ஆனால் அதை அவனிடம் வெளியிட அவளுக்கும் துணிச்சல் இல்லை. ஆண் வழிகாட்டி விட்டால் பெண் அதைத் தொடர்ந்து செல்லுவாள். ஆனால் அந்த ஆணே தயங்கிக் கொண்டிருந்தால்....

அவள் அவன் பேரில் வைத்துள்ள பிரேமையைப்பற்றி சிந் திக்கும் போது ஆனந்த பரவசம் அடைவாள். ஆனல் மறுகணம் அவள் இருதயத்தின் அடித்தட்டிலிருந்து ஒரு அக்கினி கிளம்பி அவளைத் திடுக்கிடும்படி செய்துவிடும். அந்த அக்கினியின் ஜுவா லையில் அவள் புழுப்போல் துடித்தாள். அவளுக்கு இந்த உலகில் சுகத்தின் கபாடம் என்றைக்குமாக அடைபட்டிருந்தது. அவள் இந்த சமூகத்தின் அணைந்த தீபம். ஆம்! அவள் விதவை. ஆனால் வைதவ்யத்தின் கொடுமையை அப்படியே உணரும் சக்தி அவள் இளமை மனத்துக்கு இன்னும் உண்டாகவில்லை. நகை நட்டு அணிதல் கூடாது; தலை மயிரை அழகாகச் சடை போட்டு பூ வைத்தல் கூடாது; நெற்றியில் பொட்டு வைத்தல் கூடாது; நல்ல

சேலை கட்டுதல் ஆகாது என்பன போன்றவைதான் வைதவ்யத்தில் அனுஷ்டிக்கவேண்டும் முறைகள் என்று நினைத்துவிட்டாள். அவள் பருவத்தில் அவ்வளவுதான் அவள் புத்திக்கு எட்டின கருத்துக்கள். ஆனால் சாமிநாதனைக் கண்டது முதற்கொண்டு அவள் உள்ளத்தில் அதுவரை அவள் அறிந்திராத ஒரு இன்ப எழுச்சி உண்டாயிற்று. அந்த இன்ப எழுச்சி அவள் நிலைமையை, வைதவ்யத்தின் கொடுமையை நன்கு உணர்த்தியது. வைதவ்யம் எனும் கோட்டை அவளைச் சாமிநாதனிடம் அணுகவிடாமல் கைதியாக்கி வைத்திருந்தது. சமூகம், இல்லற இன்பக் கோட்டையிலிருந்து அவளை ஒதுக்கி விலக்கித் தள்ளிவிட்டது. வைதீக உலகத்துக்கு அவள் ஜீவனற்ற வெறும் பிணம். நாயினும் கேடாக வாழ வேண்டியவள். பிறர் கண்ணில் படக்கூடத் தகுதியற்றவள். முன்னோர் கண்மூடித்தனமாக அனுஷ்டித்துவந்த துராசாரத்தின் பலன் இது.

அவள் நிலைமையை நன்குணர்ந்தாள். தற்செயலாய் அவள் இருதயத்தில் ஊன்றப்பட்ட காதல் விதையைத் தோண்டி எறிய முயன்றாள். ஆனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. அவள் காதல் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்தது. அவளைச் சுற்றியுள்ள வைதவ்யச் சுவரைத் தகர்த்தெறிந்து கொண்டு அக்காதல் சண்டமாருதம் பரவ வாரம்பித்தது. உண்மைக் காதல் ஒரு பக்கம், வைதவ்யம் எனும் உணர்ச்சி இனி யொருபக்கம். இந்த இரு சக்திகட்கும் மத்தியில் அகப்பட்டு அவள் மனம் சிதையுண்டது. இயற்கை உணர்ச்சியை மீறி வாழ அவளால் முடியவில்லை.

கணவன் இறந்து போனதும் அவள் துக்கப்படவில்லை. அன்று அவளுக்கு வயது பத்துதான். முன் பின் பழகியறியாத ஒருவன் தாலிகட்டி விட்டு இறந்துவிட்டால் எதற்காக வருந்த வேண்டுமென்று அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய விளையாட்டுப் புத்திக்குக் கணவன் இறந்தது ஒரு கேலிக்கூத்தாகத்தான் தோன்றியது. யாரோ ஒருவர் தாலி கட்டினார். நாதசுரம், பாட்டுக் கச்சேரி, நலுங்கு எல்லாம் தடபுடலாக நடந்தன. அவளும் அவள் தோழிகளும் பந்துக்களும் எல்லாம் ஒன்றாய்க் கூடி சந்தோஷமாக நான்கு தினங்கள் கழித்தனர். இவை யனைத்தையும்

அவள் ஒரு விளையாட்டாக நினைத்தாள். ஆனால் அந்த விளையாட்டின் விபரீத பலன், தான் என்றைக்கும் கைதியைப் போல் வீட்டில் அடைபட்டிருந்து வெளியுலகைத் தரிசிக்காமல் வாழ்வின் பெரும்பாகத்தைச் செலவிட வேண்டிவருமென்று அவள் ஒரு நாளும் நினைத்தாளில்லை.

அவள் புருஷன் இறந்தசெய்தி கிடைத்ததும் அவள் தாய் மண்டையிலும் மார்பிலும் அறைந்து கொண்டு ஓலமிட்டதின் உண்மை ரகசியம் அவளுக்கு நன்கு தெரியவில்லை. அந்த இளம் வயதில் எவ்வளவு முயன்றும் அன்று தான் ஏன் அழவில்லை என்பதை சிந்திக்கச் சிந்திக்க அவளுக்கு ஆச்சரியம் பெருகிக்கொண்டே வந்தது. எல்லாவற்றையும் அவள் சகித்து வாழ்ந்து வந்தாள். ஆனால் வெளியே போகக் கூடாது என்ற கட்டளை அவளுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. "நான் ஏன் வெளியே போகக் கூடாது?" என்று தாயை நோக்கி அடிக்கடி கேட்பாள் அந்த சிறு வயதினிலே. தாய் கண்ணீர் விட்டு உருக்கமாக அவளை நோக்கிப் பெருமூச்செறிவாளே தவிர ஒரு வார்த்தை கூடப் பதில் பேசமாட்டாள். அந்தப் பெருமூச்சுக்காவது இந்த சமூக விலங்கை உடைத்தெறியும் சக்தி உண்டா? அல்லது அது ஒரு சூறுவளியாக மாறி வைதீக காராக்கிரகத்தின் கருங்கற் சுவர்களைத் தகர்த்தெறியுமா? அத்தாயின் கண்ணீராவது ஆறுகப்பெருகி, சேர விரும்பும் இரு உயிர்களைச் சேர்த்து வைக்காமல் படுகொலை செய்யும் இந்த சமூக அணைக் கட்டை உடைக்கக் கூடுமா?

இப்பொழுது அவளுக்கு வயது பதினைந்து. புஷ்பவதியாய் இரண்டு மாத மாகிறது. அவள் வாழ்க்கையின் புது அத்தியாயம் சாமிநாதனைக் கண்டது முதற்கொண்டு ஆரம்பமாயிற்று. ரகசியமாகத் தலை மயிரை வாரிவிட்டு, பொட்டு வைத்துத் தன் அழகைக் கண்ணாடியில் கண்டு ரஸித்து வந்தாள். யாரும் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து தாயின் பட்டுப் புடவைகளை ரகசியமாகக் கட்டிக்கொண்டு ஆனந்திப்பாள். இந்த ஆனந்தத்தில் தான் ஒரு விதவை என்பதை அவள் ஒரு கணம் மறந்துவிடுவாள். ஆனால் மறுகணம் அவள் காதலை மீறிக்கொண்டு, தான் ஒரு விதவை என்பதை ஞாபகமூட்டிக்கொண்டு வந்தது அவள் மனம்.

தனக்கும் சாமிநாதனுக்கும் இடையில் எல்லையிலாக் கடல் ஒன்றிருப்பதை உணர்ந்தாள் அவள். அக்கடலைத் தாண்டிச் செல்லும் சக்தி அவளிடம் இல்லை. சமூக எதிர்ப்புத் தோணியில் சாமிநாதனோடு கூட பிரயாணம் செய்ய அவளுக்கு இஷ்டந்தான். ஆனால் அவன் மனம் எப்படியோ, அவளுக்குத் தெரியாது.

அவள் பெற்றோருக்கும் அவளை மறுமணம் செய்துகொடுக்க ஆசைதான். ஆனால் யார் தைரியமாக அவளை மணந்து கொள்ளக் கூடும்? பிணத்தோடு அவளையும் சேர்த்துத் தள்ளிவிட அவர் விரும்பவில்லை. கண்ணியமான ஒருவனிடம் அவளை ஒப்படைக்க அவர் தயார். ஆனால் தாங்களாகவே அந்தக் கடமையைச் செய்ய அவர்களுக்குத் தைரியம் இல்லை.

ஃ ஃ ஃ

வழக்கம்போல் அன்றும் அவள் கிணற்றடியில் வந்தாள். சாமிநாதன் மெதுவாக தொண்டையைக் கனைத்தான். அவள் குனிந்தாள். ஏதோமுனங்கினான் அவன். அவளுடைய கபடமற்ற நீண்ட கண்கள் அவன்பேரில் கனிந்து பதிந்திருந்தன.

"உம்!" என்று முனங்கினான் மீண்டும் சாமிநாதன். புன்முறுவலின் மந்தார ஒளி அவள் முகத்தில் பரவிற்று.

"உன் பெயரென்ன?" என்றான் கடைசியில் சாமிநாதன் தன்னை சரிப்படுத்திக்கொண்டு.

"துளஸி!" என்று பதில் வந்தது.

"துளஸீ! என்ன புனிதமான பெயர்!" என்றான் அவன் தயங்கிய வண்ணம்.

"பெயர்தான் புனிதம்!" என்றாள் அவள்.

"ஏன்? நீயும் புனிதமாகத்தானே காணப்படுகிறாய்?"

"நீங்கள் நினைக்கிறபடி நான் இல்லை"

"நீ எப்படி நினைத்தால் எனக்கென்ன? நீ எப்பொழுதும் எனக்குப் புனிதமானவளே"

"உண்மையாக வா!"

"சத்தியமா"

அவள் முகம் மலர்ந்தது. சாமிநாதன் அவள் அழகைப் பருகிய வண்ணம் குனிந்து நின்று கொண்டிருந்தான்.

"துளஸீ! உன்கிட்டக் கொஞ்சம் பேசணும்..............."

"என்ன பேசணும்?" என்றாள் அவள் களங்கமற்ற பார்வையுடன்.

"என்னல்லாமோ பேசணும் போலிருக்கு"

"அதோ அம்மா வரு அப்றம் பேசுவோம்."

"அப்றம் எங்கே உன்னை பார்க்கமுடியும்?"

"மனசு இருந்தால் மார்க்கமா இல்லை?"

"என் மனசுதான் உன்கிட்டே இருந்தே நான் எப்படி மார்க்கத்தைப்பற்றிச் சிந்திக்க முடியும்?"

"இன்னிக்கு ராத்திரி பனிரண்டு மணிக்கு இங்கே வறேயளா?"

"நீ வருவாயா?"

"உங்களாலே முடியுமோ?"

உனக்காகச் சாகவும் தயார்!

அவள் தாய் பக்கத்தில் நெருங்கி வரும் காலடி சப்தம் கேட்டது. சாமிநாதன் கிணற்றுச் சுவர் மறைவில் பதுங்கினான்.

"எவ்வளவு நேரமடீ ஒரு குடம் ஜலம் கொண்டுவர" என்று கேட்டாள் அவள் தாய்.

"இதோ வந்துட்டேன் அம்மா" என்றாள் துளஸி.

அவள் மறையும் வரையில் சாமிநாதன் துளஸியின் கால்களை நோக்கி இருந்தான்.

"ஏண்டா சாமி! இன்னுமா ஸ்நானம் பண்ணி ஆகவில்லை?" என்று கேட்டுக்கொண்டு அவன் தாயும் கேணிப் பக்கம் வந்தாள்.

ஃ ஃ ஃ

இரவு மணி பனிரண்டு. எங்கும் நிசப்தம். சாமிநாதன் மெது வாக அறையைவிட்டு வெளியேறி வீட்டுப் பின்பக்கம் வந்தான். நக்ஷத்திர ஒளியைத் தவிர வேறு வெளிச்சம் ஒன்றும் அப்

பொழுது இல்லை. அவன் இருதயம் துடித்தது. "அவள் வரக் கூடுமா" என்ற கேள்வி பிறந்தது அவன் உள்ளத்தில். எப்படியா வது அவள் வரக்கூடுமென்று நினைத்தான் அவன்.

துடிக்கும் இருதயத்தோடு அவன் கிணற்றடியை அணு கினான். குனிந்து எதிர் பக்கம் நோக்கினான். யாரும் அங்கில்லை. "துளஸீ!" என்று மெதுவாக அழைத்தான். பதில் இல்லை. ஐந்து நிமிஷ நேரம் அவனுக்கு ஐந்து யுகமாகத் தோன்றிற்று.

கடைசியில் சிறு கால்கள் நிலத்தில் ஓசைப்படாமல் மெது வாக வைத்துவரும் ஒலி அவன் காதுகளில் விழுந்தது. அவள் வந்துவிட்டாள். சாமிநாதன் மீண்டும் ஒருமுறை குனிந்தான். துளஸி அங்கு நின்று கொண்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

"துளஸீ!"

அவள் மெதுவாக சிரித்தாள். அவனும் சிரித்தான்.

"தைரியமாக வந்துட்டாயே நீ."

"எப்படியாவது வந்துடறேனு சொன்னேனல்லவா?"

"உங்கம்மா அப்பா..............."

"அவா எல்லாம் தூங்கறு"

"துளஸீ! உன்கிட்டப் ரொம்பப் பேச வேணும் என்று ஆசை யாயிருக்கு. ஆனல் ஒன்றுமே தோன்றுகிறதில்லை."

"எனக்கும் அப்படித்தான்."

"உன்னை சரிவரக் காணக்கூட முடியவில்லையே. இந்த பாழும் கிணறு நமக்கு மத்தியே இருக்கே."

"இந்தக் கிணற்றைத் தாண்டிவர உங்களாலே முடியுமா?"

"உம்! இதோ வறேன்."

"வேண்டாம்! இருட்டு வேளை எதாவது..............."

"உன் இஷ்டம்"

"நீங்கள் ரொம்ப நேரமா காத்துண்டிருக்கயளோ?"

"உனக்காக இரவு பூராவும் காத்துண்டிருப்பேன்."

"எவ்வளவு அன்பு!"

"உனக்குச் சந்தேகமா?"

"எப்படி நம்பறது உங்களை?"

"இந்த ஓரமா உன் கையை நீட்டு சொல்றேன்"

"எதுக்கு?"

"நீட்டு, அப்றம் தெரியும்"

துளஸி தனது மிருதுவான கரக் கொடியை கிணற்றுச் சுவர் மேலாக நீட்டினாள். சாமிநாதன் அவள் கரத்தைப் பற்றினான். இருவர் உடலும் மின்சாரம் பட்டாற்போல் நடுங்கின. மயிர் சிலிர்த்தது.

"துளஸீ! இந்தக் கைமேல் அடித்து ஆணையிடுகிறேன்: நீதான் என் சர்வமும்" என்றான் சாமிநாதன் உணர்ச்சி ததும்ப.

"நானும் அப்படியே ஆணை இடுகிறேன். நீங்கள்தான் என் ஸர்வமும்" என்றாள் அவள்.

"கூடிய சீக்கிரம் கல்யாணம் நடத்தச் சம்மதம்தானே?"

அவள் திடுக்கிட்டது அவள் கைவழியாக சாமிநாதன் உடலை அசைத்தது. கல்யாணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் தான் ஒரு விதவை எனும் ஞாபகம் துளஸிக்கு உண்டாயிற்று. அதுவரை அனுபவித்த சந்தோஷமெல்லாம் நொடிப் பொழுதில் மறைந்தது. அவள் பெருமூச்சுவிட்டாள்.

"துளஸீ என்ன யோசிக்கிறாய்?" என்றான் சாமிநாதன் அந்த மௌனத்தைத் தாங்க முடியாதவனாய். "ஒன்றுமில்லை" என்றாள் அவள். "இல்லை எதையோ மறைக்கிறாய் நீ" என்று திரும்பவும் கேட்டான் அவன்.

"இல்லை என் நிலைமையைக் கூட சரிவர தெரிந்துகொள்ளாமல் நீங்கள்............"

"பூ இவ்வளவு தானா! உன் நிலைமை எப்படியிருந்தால் எனக்கென்ன? நான் உன்னைத்தான் விரும்புகிறேன். உன்னை நான் நம்புகிறேன் நீ புண்யவதி."

"ஆனாலும்............"

"பேசாமல் இரு துளஸீ, மீதி இருக்கும் கொஞ்ச நேரத்தையாவது வேறு விஷயங்கள் பேசிச் செலவிடலாம்."

"இன்னும் இங்கிருக்கவா சொல்றயள்?"

"ஏன்! அவ்வளவு நேரம் ஆயிடுத்தா?"

"இல்லையா பின்னே. ஆராவது எழுந்திருந்து வந்துட்டா?"

"என்ன அவசரம்? இரேன் கொஞ்சநேரம் கூட"

ஊஹூம்! நேரம் ரொம்ப ஆயிடுத்து வறேன்"

"சரி!" என்றான் அவன் அரை மனதோடு.

சாமிநாதன் குனிந்து அவள் கரத்தில் ஒரு முத்தம் வைத்தான். மறுகணம் அவள் மறைந்தாள். அவள் சென்ற திசையை நோக்கி ஐந்து நிமிஷ நேரம் அசைவற்று நின்றுகொண்டிருந்தான் சாமிநாதன். ஒரு பெருமூச்செறிந்துவிட்டு அவனும் வீடு திரும்பினான்.

ஃ ஃ ஃ

அன்று மத்தியானம் சாமிநாதன் சாப்பிடும்போது தற்செயலாக அவன் தாய் பக்கத்து வீட்டாரைப்பற்றிப் பிரஸ்தாபித்தாள். மீனாக்ஷி தெரிசனம் செய்ய சென்னையிலிருந்து வந்தவர் எனும் தகவல் கிடைத்தது அவனுக்கு. இன்னும் இரண்டு நாளில் அவர்கள் மதுரையை விட்டுச்செல்லப்போகும் தகவலும் கிடைத்தது. அவன் சாப்பாட்டைப் பாதியோடு முடித்துக்கொண்டு தனது அறைக்குச் சென்றுவிட்டான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் அவன் ஆபீசுக்கு விடுமுறை நாள். பேசாமல் பாயை விரித்துப் படுத்துக்கொண்டான். என்ன செய்யவேண்டு மென்று அவனுக்குத் தோன்றவில்லை. இரவு வரும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

அன்றைய சூரியனும் அஸ்தமித்தான். இரவும் வந்தது. இருள் சூழ்ந்தது. மணி பனிரண்டாயிற்று. சாமிநாதன் கேணியருகில்சென்றான். யாரோ விம்மி விம்மி அழும் சப்தம்கேட்டது.

"துளஸீ!" என்று கூப்பிட்டான் அவன். பதில் வரவில்லை. ஆனால் விம்மலின் கனம் உயர்ந்தது.

"துளஸீ!" அவன் திரும்பவும் அழைத்தான். அவள் விம்மிக் கொண்டே சுவர் ஓரமாக வந்து நின்றாள்.

"அழாதே துளஸீ! எல்லாம் எனக்குத் தெரியும்"

"நான் எப்படி உங்களைப் பிரிந்து வாழ்கிறது?" என்றாள் விம்மி விம்மி.

"உனக்கு மட்டுமா இந்த வருத்தம்? நான் எதையும் சகிப்பேன் துளஸி; ஆனால் உன் கண்கள் நீர்விடுவதைக் கண்டு சகிக்க முடியாது."

"என்னை என்ன செய்யச் சொல்றயள்?"

"பேசாமல் பட்டணத்துக்குப்போ; நான் உன்னை அங்குவந்து சந்திக்கிறேன்."

"அதெல்லாம் முடியாத காரியம்."

"உன் விலாசம் தெரியுமல்லவா?"

"அதை எழுதி எடுத்துண்டு வந்திருக்கேன்"

"இந்தா இது என் விலாசம் எழுதின கவர். நீ காகிதம் போடு. நானும் போடுகிறேன். நீ போனதும் எல்லா விவரத்தையும் அம்மா கிட்ட சொல்லி கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி கேட்கிறேன். அப்றம் எல்லா விவரத்துக்கும் உங்கப்பாவுக்கும் எழுதுகிறேன்"

"என்னமோ தெய்வம் தான் வழிவிடணும்"

"துளஸீ! அந்த சத்தியம் ஞாபகம் இருக்கா உனக்கு?"

"அதை நான் எப்படி மறக்க முடியும்?"

"இன்று தான் உன்னை நான் கடைசியாகச் சந்திக்கும் நாள். இன்றாவது உன் உருவத்தை சரிவரப்பார்க்க இந்தக் கேணியைக் கடந்து வரட்டுமா?

"இருட்டாயிருக்கே கால் தடுமாறி விட்டால்..............."

"அவ்வளவு சுலபமாக ஆபத்து ஒன்றும் வந்துவிடாது"

அவன் கேணிச் சுவரில் ஏறினான்; துளஸீ அவனுக்குச் சகாயமாக தனது கையைக் கொடுத்தாள். அவன் அந்த கரத்தைப் பற்றிக் கொண்டு மெதுவாக நகரத் தொடங்கினதும், "சாமீ!" என்ற குரல் அவன் பின்பக்கம் கேட்டது. துளஸி கையை உதறிவிட்டு, மருண்டு ஓடிவிட்டாள். அவன் நிலத்தில் குதித்தான். சாமிநாதன் தாய் அங்கு நின்று கொண்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

"அம்மா!"

"சாமிநாதா!"

ஒரு கணம் இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி நின்றனர். அடுத்த விநாடி வெட்கத்தால் சாமிநாதன் சிரசு குனிந்தது.

"கள்ள சன்னியாசி!" என்றாள் அவள் தாய்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

"கல்யாணம் வேண்டாம் உனக்கு என்ன!" என்று தொடர்ந்து கூறினாள் அவன் தாய் குத்தலாக.

"இப்படி ஐந்தாறு கைம்பெண்கள் துணிஞ்சு இறங்கினா எதுக்கடா கல்யாணம்?"

சாமிநாதன் திடுக்கிட்டான். துளஸி விதவை என்பது அவனுக்குத் தெரியாது. அப்போதுதான் அவள் தன் நிலைமை, தன் நிலைமை என்று சொன்னதின் ரகசியம் அவனுக்கு விளங்கிற்று.

"என்னம்மா அவள்......." வார்த்தைகளைச் சொல்லி முடிக்க அவன் நாத் துணியவில்லை"

"புருஷனைப் பறிகொடுத்தவள்" என்று முடித்தாள் அவன் தாய்.

"விதவையா?" நம்பிக்கை ஏற்படாததுபோல் கேட்டான் மீண்டும் அவன்.

"ஆமாம் கைம்பெண்" என்றாள் அவன் தாய்.

சாமிநாதன் தலை சுழன்றது. அவன் அப்படியே கிணற்றடியில் உட்கார்ந்து விட்டான். வெகு சிரமத்தோடு அவன் தாய் அவனை நடத்தி வீட்டிற்குள் கொண்டுபோய் படுக்கவைத்தாள். விடியற்காலம் அவனுக்குக் கடுமையான ஜுரம் கண்டுவிட்டது. பேத்தலும் புலம்பலும் ஆரம்பித்தன.

ஃ ஃ ஃ

நாட்கள் பல சென்றன. சாமிநாதன் படுத்த படுக்கையாக விருந்தான். அவன் உள்ளத்தில் துளஸி பேரில் வைத்துள்ள காதல், மேலோங்கி நின்றது. நாட்கள் செல்லச் செல்ல அவன் அவளுடைய வைதவ்யத்தைப்பற்றி அறவே மறந்தான். அதை ஒரு பொருட்டாகக்கூட மதிக்கவில்லை. ஆனால் தன் பெற்றோர்கள் இருக்கிறார்களே, அவர்கள் மனம் தனக்கு அநுகூலமாக மாறிவிடுமென்று அவனால் நினைக்க முடியவில்லை. அவர்கள் பழுத்த சனாதனிகள். ஒன்றில் மரணம் அல்லது துளஸியின் மணம். இவற்றில் எதையாவது ஒன்றை வரிப்பதற்கு அவன் தயாராக விருந்தான்.

இது நிற்க, கண்ட வைத்தியர்கள் எல்லாம் சாமிநாதனை பரீக்ஷித்துப் பார்த்தார்கள். அதனால் அவனுக்கு ஒரு குணமும் ஏற்படவில்லை. நினைவு வரும்போது வெறும் சூன்யத்தை நோக்கி விழிகள் ஒரே ஸ்தானத்தில் சலனமற்றிருக்கும். நினைவற்றிருக்கும்போது "துளஸீ! துளஸீ! என்று பேத்துவான். கல்லும் கரையும்படிக்கு அவன் பெற்றோர்கள் அவன் நிலைமையைக் கண்டு துடிதுடித்தனர். ஆனால் சனாதன மனம் விதவா விவாகத்திற்கு அநுமதி தர ஒப்புக்கொள்ளவில்லை.

ஒருநாள் சாமிநாதன் தாய் அவன் கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தாள்.

'அம்மா' என்று மெதுவாக அழைத்தான் சாமிநாதன். தாய் தலையை மகன் பக்கம் நீட்டினாள்.

"துளஸி இல்லாமல் நான் வாழமுடியாது. எவ்வளவோ சிரமப்பட்டுப் பார்த்தேன் அவளை மறக்க முடியவில்லை. இந்த சமயத்தில் அவள் என்கிட்ட இருந்தால்................"

அவனால் வேறொன்றும் பேசமுடியவில்லை. தாயின் கரத்தைத் தூக்கி நெற்றியில் வைத்து அமுக்கினான். அவன் தாயின் கண்களில் நீர் துளித்தது.

'சாமி! அவள் தான் கைம்பெண்ணாச்சே!'

'அது அவள் குற்றமா அம்மா?'

"என்னமோ அப்பா உங்கப்பா வரட்டும் சொல்லிப் பார்க்கிறேன்."

"சொன்னால் மட்டும் போதாது. நான் பிழைக்க வேண்டுமென்று உங்களுக்குக் கொஞ்சமாவது ஆசையிருந்தால் இன்னும் இரண்டு நாளில் துளசி இங்கு வரணும். இல்லாவிட்டால் இது என் மரணப் படுக்கை."

இதற்கு முன் அவன் அம்மாதிரி பேசி அவன் தாய் அறிந்ததில்லை. மகனின் பிடிவாதமும், வெகுகாலமாக உள்ளத்தில் ஊறிக் கிடந்த ஆசார முறையும் சேர்ந்து ஒரு சிறு போர் நடத்தியது சாமிநாதன் தாயின் உள்ளத்தில்.

"என்னமோ அப்பா கடவுள் வழி விடணும்" என்றாள் கடைசியில்.

சாமிநாதன் முகம் மலர்ந்தது; தாய் தனக்கு அனுகூலமாகத் திரும்பிவிட்டதை உணர்ந்தான் அவள் தோற்றத்திலிருந்து.

ஃ ஃ ஃ

"துளஸீ!" என்றான் சாமிநாதன். அவன் குரல் மிருதுவாக விருந்தது ஹீனமடைந்து. துளஸி கண்ணீர் விட்டவண்ணம் அவனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள்.

"துளஸி! அந்த சத்தியவாசகம் உனக்கு ஞாபகம் இருக்கா?" என்றான் அவள் தலைமயிரை ஒழுங்குபடுத்திக் கொண்டு.

"அந்தப் பிரமாணம் தான் என்னை சாகாமல் காப்பாற்றிற்று" என்றாள் அவள்.

"உனக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்ததா என் பேரில்?"

"நீங்கள் என்னை நம்பவில்லையா அதுபோல் நானும் நம்பினேன். ஆனால்............ல்........".

"ஆனால்.........?"

"நான் விதவை யல்லவா?"

"நீ என் கண்மணி துளஸி!"

"சத்தியமா"

"உண்மை"

அவள் குனிந்து சாமிநாதன் இதழ்களில் முத்தமிட்டாள்.

---

# கனகவல்லியின் காதல்

(சோம. சட்டநாதன், கொழும்பு)

கனகவல்லிக்கு வயது சுமார் பதினைந்திருக்கும். இயற்கையிலேயே அதிக அழகுள்ளவள். திரண்டு உருண்டு வளர்ந்திருந்த அவயவங்களும், மதியை யொத்த வதனமும், உடையவள். தாய் மொழியாகிய தமிழிலும், அந்நிய மொழியாகிய ஆங்கிலத்திலும் நல்ல பயிற்சி அடைந்தவள். சென்ற வருடம்தான் கமலாகரனும் கனகவல்லியும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினர்.

கமலாகரன் உத்தம குணங்களும், விவேகமும் உடைய இளம் பருவத்தினன். அறிவின் ஆற்றலுக் கேற்ற வடிவமும், அழகும் உடையவன். அவனும் கனகவல்லியும் இணைபிரியாத நண்பர்கள் ஏன்? உயிர் ஒன்று உடலிரண்டு என்று சொல்லும் படியான அவ்வளவு உள்ளன்போடு சேர்ந்து காணப்படுவார்கள்.

கனகவல்லி மெட்ரிகுலேஷனோடு பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. அவளது பெற்றோர்கள் சம்மத மின்மையே அதற்குக் காரணம். அவள் அடிக்கடி கமலாகரன் வீட்டிற்குப் போவதும் கமலாகரன் இவள் இல்லத்திற்கு வருவதுமாக இருந்தனர். அன்று நேசப் பாவனையில் தோன்றிய அன்பு இன்று அவர்களிடையே காதலென்னும் மலராக மாறியது.

கமலாகரன் கனகவல்லியை உள்ளன்போடு காதலித்தான். அவளும் ஹிருதய பூர்வமாக நேசித்தாள். தான் கமலாகரனையன்றி

மற்றொருவரை மணப்பதில்லை யென உறுதி கொண்டாள். அவனும் கனக வல்லியையன்றி மற்றொரு மங்கையை மணப்ப தில்லை யெனத் தீர்மானித்தான்.

தைமாதம் பிறந்துவிட்டது. திருமணக் கோர்ட்டு திறக்கப் பட்டது. பட்டம் பெற்ற, பெறாத எல்லா இளைஞர்களுக்கும் கிராக்கிதான். வசீகரன் கனகவல்லியின் அம்மான்பிள்ளை. நிரம்ப சொத்துடையவன்; சொற்பப் படிப்புத்தான். குடிப்பழக்கமும் உடையவன். ஆனாலும் தன் தமையன் பிள்ளைக்கே தன் பெண்ணைக் கொடுக்கவேண்டுமென்று மீனாக்ஷி அம்மாள் (கனகவல்லியின் தாயார்) பிடிவாதஞ் செய்தாள். சோமசுந்திரம் பிள்ளையும் வசீகரன் குடிகாரனென அறிந்தும் நிரம்ப சொத்துடையவன் என்பதைக் கருதி தம்மனைவியின் பிடிவாதத்திற்கு இணங்கி சம்மதித்தார். கனகவல்லி தான் கமலாகரனையே தன் நாயகனாய் வரித்து விட்டதாயும் மற்றொருவரை மணப்பதில்லையென உறுதி பூண்டிருப்பதாயும் எனவே வசீகரனை மணக்க முடியாதெனவும் கூறியது அவர்கள் காதில் விழவேயில்லை. என்னே! இப்பெற்றோர்களின் மனப்பான்மை!!

வசீகரனுக்கும், கனகவல்லிக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. கலியாண நாளும் குறிக்கப்பட்டது. திருமணத்திற்கு முந்திய தினம் இராத்திரி நிச்சயதார்த்தம் நடத்துவது ஒரு வழக்கம். மாப்பிள்ளையும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். பெண்ணை மாப்பிளையின் பக்கத்தில் உட்காரவைக்க, கனகவல்லியின் தாயார் அவளைக் கூப்பிட்டாள். அவள் அறையில் தேடினாள்; காணவில்லை. இதற்குள் குழப்பம் முதிர்ந்துவிடவே எல்லோரும் ஒவ்வொருவிடமும் சென்று தேடலாயினர். சோமசுந்தரம் பிள்ளை கோபமும், வருத்தமும் அடைந்தவராய் இங்கும் அங்கும் சுற்றினார் திடீரென்று அவர் கண்கள் மேஜையின் மீது கிடந்த கடிதத்தைக் கண்டன. அதை அவர் யெடுத்துப் பின்வருமாறு வாசிக்கலானார்:-

அன்புள்ள தந்தையே!

நான் கமலாகரனையே மனப்பூர்வமாய்க் காதலிக்கின்றேன். என்றும், அவரையன்றி வேறெவரையும் மணம் புரியேன் என்றும் தங்களிடம் ஏற்கனவே பலமுறை தெரிவித்தேன். என் உடல், ஆவி, யெல்லாம் அவருக்கு

நான் அர்ப்பணம் செய்துவிட்டேன். அப்படி யிருக்க யான் தாங்கள் எனக்கு நாயகனுக நியமித்த வசீகரனை எப்படி மணக்கக்கூடும்? இப்பொழுது நான் பெற்றோர்கள் மனத்திற்கு மாருக கமலாகரனோடு கூடி வாழ்ந்தால் ஊர் அபவாதத்திற்குள்ளாகி வருத்தமடைய நேரிடும். ஆகையால் இவ் வாழ்க்கையைப் பொது ஜன சேவைக்கென வைத்துவிட்டேன். இன்று தாயின் தொண்டில் ஈடுபட்டிருக்கும் பரமாத்மாக்களோடு நானும் சேர்ந்து அத்தொண்டிற்கு என் பங்கையும் சேர்க்கப் போகிறேன்.

யான் தங்களை அதிகக் கஷ்டத்திற்குள்ளும் விசனத்திற்குள்ளும் ஆக்கியதற்கு வருத்தப்படுகிறேன். மன்னிக்கவும்.

இங்ஙனம்,

கனகவல்லி.

இதைக்கண்ணுற்ற சோமசுந்தரம் பிள்ளைக்குத் தலை சுறுசுறுத்தது. மனம் குழம்பிற்று. அப்படியே மூர்ச்சையானார். பின்பு தெளிந்து அழுதார். பிரலாபித்தார். என்ன பயன்? மிகவும் தாமதமாகிவிட்டது. இழந்த கனி மீண்டும் கிட்டுமா?

ஃ ஃ ஃ

சட்டமறுப்பு இயக்கம் மிகத் தீவிரமாக நடக்கிறது. எங்கும் அன்னிய ஜவுளி மறியல், மதுவிலக்கு மறியல். மறியல் தொண்டில் ஆண், பெண் இருபாலரும் லக்ஷக்கணக்காய் கலந்துகொண்டனர். போலீஸ் குண்டாந்தடி பிரயோகத்திற்கோ கணக்கில்லை. சேவை செய்துகொண்டே தாயின் விடுதலைக்கு உயிர் விட்டனர் அநேகர்.

இருவாரங்களுக்குப் பிறகு ஒருநாள் பத்திரிகைகளில் பின் வரும் செய்தி பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு காணப்பட்டது.

தாயின் விடுதலைக்கு உயிர்விட்ட தையல்,

மங்களபுரம் 19-3...........

இவ்வூரில் பிரசாரமும் மறியலும், மிகத் தீவிரமாக

நடந்துவருகின்றன. நேற்று மாலை அன்னிய ஜவுளி மறியல் செய்துகொண்டிருந்தபொழுது போலீஸாரால் தாக்கப்பட்டோர் பலர். அன்னோரில் அநேகர் அபாயகரமான நிலையில் இருக்கின்றனர். மங்களபுரத்தைச் சேர்ந்த கனகவல்லி என்னும் 16 வயது நிரம்பப் பெறாத சைவ குல மங்கையொருவள் கடைசி வரையில் மிக தைரியமாய் மனங் கலங்காது தொண்டாற்றியது மிகவும் போற்றத்தக்கது. அம்மங்கை தலையில் அடைந்த அடிகளின் பயனாய் நேற்று ஜவஹர் ஆஸ்பத்திரியில் உயிர் துறந்தாள். அன்னவளின் ஆத்மா சாந்தி அடைவதாக!

கனகவல்லி ஊரைவிட்டுப் போன நாளிலிருந்து கமலாகரன் ஏக்கங் கொண்டு மெலிந்துவிட்டான். உயிர் ஒன்று தான் கூண்டாகிய உடலில் அடைந்து கிடந்தது. நடைப்பிணமென வாழ்ந்து வரலாயினன். மேற்கண்ட பத்திரிகைச் செய்தியைப் படித்த போது சாய்வு நாற்காலியில் கிடந்தவாறே அவன் கைகளில் நின்றும் பத்திரிகை நழுவிக் கீழே விழுந்தது. அவன் ஆத்மா கனகவல்லியைத் தொடர்ந்து மேலுலகம் சென்றது.

காதல் மணம் ஓங்குக! பண ஆசை ஒழிக.

கருணை உள்ள இடத்தில் — விதவை இல்லை.

# சமூகத் தீர்ப்பு

(ப. நீ.)

சரசாவுக்கு குழந்தைகளென்றால் அபாரப் பிரியம். எல்லா குழந்தைகளும் சரசாவிடம் நெருங்கிப் பழகுவதற்கு, இதுதான் காரணம். குழந்தைகளுக்கு சிச்ருஷை செய்வதில் சரசாவுக்கு தனிப் பைத்தியம்-இதை ஒரு வேடிக்கை- பொழுது போக்கு என்று கூட அவள் எண்ணினாள்.

குழந்தைகள் மட்டுமல்ல- அண்டையிலிருக்கும் பெரியவர்களெல்லாரும் கூட சரசாவிடம் - அவளின் 'தங்கமான' குணத்திற்காகப் பிரியமும் தவிர்க்க முடியாத - அழிக்க முடியாத ஆணையாக ஏற்பட்டுவிட்ட தலைவிதிக்காக இரக்கமும் கொண்டனர். அவ்வளவு நல்லவள் சரசா. ஆனால்...........

ஃ ஃ ஃ

ஒரு நாள் பிற்பகல், சரசா அண்டை வீட்டுக் கோமளத்திற்கு - வயது ஏழாகிறது - தலை வாரிப் பின்னினாள். நறுமணம் வீசும் மல்லிகையைச் சூடினாள். அப்பொழுது அந்தக் குழந்தை கோமளம் "அக்கா! இவ்வளவு பூவும் எனக்கே வா வைக்கப்போகிறாய்? நீயும் கொஞ்சம் வைச்சுக்கோ யேக்கா" என்று ரொம்ப தாராளமாகச் சொன்னாள்.

ஐயோ! அதென்ன? இந்த வார்த்தையைக் கேட்ட சரசாவின் உடல் ஒரு குலுக்குக் குலுங்கியது. பழுக்கக் காய்ச்சிய சம்மட்டியினால் மண்டையில் தாக்குண்டவளைப் போன்று ஒதுங்கினாள்.

பதில் வராததைக் கண்ட கோமளம் "அக்கா நீயும் கொஞ்சம் வைச்சுக் கோக்கா நான் வச்சுவிடவா?" என்று கேட்டாள். ஆ! அந்தக் குழந்தைக்குத் தான் எவ்வளவு தாராளம்! இரக்கம் நன்றி! கைம்மாறு! அன்பு!

சரசாவின் எண்ணம் எங்கெங்கோ ஓடிச் சென்று கொண்டிருந்தது: அலைந்தது. பழமையை, கழிந்ததை, நைந்து போன கதை

யை யெல்லாம் எண்ணிற்று. இந்தச் சமயம் கோமளம் கீழே கிடந்த புஷ்பத்தை எடுத்தாள். சரசாவின் தலையில் சொருக ஆரம்பித்தாள். அப்பொழுது தான் உணர்ச்சியை அடைந்தாள் சரசா. திரும்பினாள். கோமளத்தின் செய்கையைக் கண்டாள். தன்னைக் கண்டவுடன், தன்னுடைய செய்கைக்காக ரொம்ப சந்தோஷப் பட்டு ஆனந்தக் கூத்தாடுவாள் சரசா என்றெண்ணினாள் கோமளம். ஆனால் அந்தோ! சரசா வெடுக்கென்று பிடுங்கினாள். உதறினாள். குழந்தை கோமளம் படேரென்று கீழே சாய்ந்தாள்; வீறிட்டலறினாள்.

குழந்தைகளிடத்தில் தன் முழு அன்பையும் செலுத்திய சரசா—குழந்தைகட்கு வேலை செய்வதையே ஒரு தொண்டாகக் கருதிய சரசா ஏன் இப்படி மாறிப் போனாள்? குழந்தை செய்த குற்றந்தா னென்ன?

சரசாவின் முகம் மிகக் கடுமையாக இருந்தது; அதைக் கோபம் என்று சொல்லமுடியாது. பயங்கரம்—பிரமை—கொலை செய்து விட்டவனுடைய முகம் கூட அவ்வளவு விகாரத்தை யடைய முடியாது. இதே சமயம் கோமளம், தன்னைத் துரத்தி வந்த புலியினிடத்திலிருந்து தப்பித்துக் கொள்பவளைப் போன்று மெல்ல மெல்ல சரசாவைப் பார்த்தவண்ணம் நடந்தாள். சரசா ஓடிப்போய் அவளை எடுத்து மார்போடணைத்துக் கொண்டு திரும்பினாள். "கண்ணு! கோமளம் அழாதேடி" என்று மிக உருக்கமாகக் கூறினாள். கோமளத்தின் மனம் சிறிது சாந்தியை யடைந்தது; தைரியமுமடைந்தாள். "அக்கா! நான் என்னக்கா பண்ணினேன்? பூத்தானே வைத்தேன்?"

சரசா:—ஆமாண்டி என் கண்ணே! நான் பூவே வைத்துக் கொள்ளக் கூடாதடி.

கோமளம்:—ஏனக்கா அப்படி! பூவே வைத்துக் கொள்ளக் கூடாதா? இதென்னக்கா? அம்மா, அத்தை எல்லாம் வைச்சுக்கிறாளே?

சரசா:—ஆமாம் எல்லாரும் வைச்சுக்கலாம் நான் மட்டும் கூடாது. அது........அது என் தலைவிதிடி.

கோமளம்:—அப்படின்னா?

சரசா:—நான் விதவை. அதனாலே பூ வெல்லாம் வைச்சுக்கக் கூடாது.

கோமளம்:—நீ எக்கா விதவை?

சரசா.—சிறிது தானே? யோசித்தாள். குழந்தையை சமாதானம் செய்யவேண்டு மென்பதற்காவது அவளுடைய கேள்விகட்குப் பதில் சொல்லலானாள்.

"என் புருஷன் இறந்து போனார்!!

கோமளம்:—செத்துப் போய்விட்டாரா? போனால் போகட்டுமே. நீ பூ வைச்சுக் கோக்கா. செத்துப் போனவர் இனிமே வந்து கேக்கவா போறாரு?

சரசா அதற்கு மேல் குழந்தையிடம் பேசிக் கொண்டிருப்பது விபரீதமாக முடியுமென எண்ணினாள்.

"இனிமேல் பூவைச்சுக்கிறேன். நீ வீட்டுக்குப் போய் விட்டுவா" என்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

ஃ ஃ ஃ

சரசா பால்ய விதவை. பதினொரு வயதில் தாலியறுத்தவள்: இல்லை, தாலியை அறுத்துக் கொண்டார்கள். அவளும் அவளுடைய விதவைத் தாயுந்தான் அந்தக் கிராமத்தில் வசித்து வருகிறார்கள்.

புஷ்பத்தைக் கூட சூடிக்கொள்ளக் கூடாத ஒரு விதவை என்று கோமளத்தால் நினைவூட்டப்பட்டதிலிருந்து சரசா ஏக்கங் கொண்டாள்.

ஃ ஃ ஃ

ஓராண்டு சென்றது. கமலா கர்ப்பமுற்றாள். ஆறுமாத கர்ப்பம். பிறர் வீட்டு ரகசியங்களை அறிவதிலேயே ஆவல் கொள்ளும் பெண்மணிகள் பலரிருக்கிறார்க ளல்லவா? அவர்களால்—இவ்விஷயம் மிக மிக ரகசியமாகவே எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டுவிட்டது. அந்த ஊரிலுள்ள சில பெரியவர்கட்கும் இவ்விஷயம் தெரிந்தது. ஒருவரோடொருவர் விதவை கர்ப்பமுற்றது அந்த

கிராமத்திற்குப் பெரிய அவமானத்தை உண்டாக்கி விட்டதென்று பேசிக் கொண்டனர். இதைப்பற்றி தனித்தனியே பேசிக் கொண்டிருக்கக் கூடாதென்றும், சமூகத் தலைவர்கள் ஒன்று கூடி விசாரித்துத் தீர்ப்புச் சொல்லவேண்டும் என்றும், ஒரு புண்யாத்மா அபிப்பிராயந் தெரிவித்தார். இது ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டது.

சமூகத் தலைவர்கள் கூடினர். விதவை கருவுற்றது கிராமத் தலைவர்களுக்கு பெருத்த அவமானத்தை உண்டாக்கி விட்டதென்றும், மிக மிகத் தவருன காரியத்தை அந்தப் பெண் செய்துவிட்டாளாதலால் அந்தக் குடும்பத்தை சமூகப்ரஷ்டம் செய்யவேண்டுமென்றும் பேசினர். இப்படியே தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

மறுநாள் விமலாவும் சரசாவும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். சமூகத் தலைவர்களின் தீர்மானத்தை சரசாவுக்கு அறிவித்தாள் விமலா. சரசா திடுக்கிட்டாள். கிராமத்திலுள்ளவர்கள் கூடி தன்னைப்பற்றிப் பேசுவார்களென அவள் எண்ணவேயில்லை. "அங்கே நடந்ததென்ன? கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்?" என்று கேட்டாள்.

விமலா:—விவரம் என்ன? எல்லோரும் கூடிப் பேசினர்கள். பலர் பல மாதிரி அபிப்பிராயந் தெரிவித்தார்கள். அடுத்த வீட்டு நரசிம்ஹம் தான் இப்படிப்பட்ட பெண்களால் ஊரே கெட்டுப் போகிறதென்றும், ஆகையால் தள்ளிவைக்க வேண்டும் என்றும் கூறினர்.

சரசா:—யார்? இந்த அடுத்த வீட்டு நரசிம்ஹமா?

விமலா:—ஆமாம்? என்ன அதிசயம்?

சரசா:—ஒன்றுமில்லை கேட்டேன் பிறகு?

விமலா:— அவ்வளவு தான்.

சமூகத் தலைவர்கள் கூடித் தீர்ப்புச் சொன்னர்களே அந்த மடத்தின் வாயிற்படியில் ஒரு கடிதம் ஒட்டப்பட்டிருந்தது. அதில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

சமூகப் பெரியார்களே! நீங்களெல்லாம் பெரியவர்கள்! வெட்கக்கேடு! நீங்கள் தீர யோசித்து நல்ல தீர்மானத்தைச்

செய்தீர்கள்! நான் ரொம்பப் பொல்லாத காரியத்தைச் செய்து விட்டேன். அது நான் கருவுற்றது தானே? இது நானாகவா செய்துகொண்டேன். யாராவது எனக்கு உதவி செய்துதானே இருக்கவேண்டும்? அது ஏன் உங்களுடைய அருமையான மூளையில் உதிக்காமற் போய்விட்டது? நான் செய்தது குற்றமானால், ஒரு அபலைப் பெண்ணைக் கெடுத்து இக்கதிக் காளாக்கியவன் செய்ததும் தவறுதானே? ஒரு வேளை இது நானாகச் செய்துகொண்டது தானென்று நீங்கள் நினைத்தீர்களோ? அல்லது ஆடவன் செய்தது குற்றமில்லை என்று எண்ணினீர்களோ? அது மட்டுமா? அந்த நரசிம்ஹம்—என்னைக்கெடுத்த அவன்—அந்தக் கூட்டத்திலே உட்கார்ந்து கொண்டு தள்ளித்தான் வைக்கவேண்டுமென்று அழுத்தந் திருத்தமாகக் கூறினானே? அடகடவுளே! இப்படி ஒருதலைப் பட்சமான சமூகம் எத்தனை நாளைக்கு இருக்கமுடியும்? கண்ணிருந்தும் அறிவிருந்தும் ஒன்றுமே இல்லாததுபோல் செய்யப்படும் தீர்ப்புக்கு என்றைக்கு அழிவுகாலம்? விதவையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற முதல் தவறைத் திருத்திக் கொள்ளாமல் மேற்கொண்டு தீர்ப்புச் சொல்லும் பெரிய தவறையும் என்றைக்கு அடியோடு தொலைத்து தலைமுழுகப் போகிறார்களோ அன்று தான் அனைவருக்கும் நல்ல காலம்.

அபலை—சரசா

ஃ ஃ ஃ

"சரசா! சரசா" வென்று அவள் தாய் ஊருக்கருகில் அலைந்து கொண்டிருந்தாள். பாவம்! பெற்ற மனம்! பைத்தியக்காரியைப்போல் அலைந்துகொண்டிருந்த அந்த அபலையைக் கூட ஓரிரண்டு நாட்களுக்கப்புறம் காணவில்லை. சமூகம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

# சிசு வளர்ப்பு

பிறந்து இரண்டே வாரங்களான ஒரு சிசுவை எப்படிப் பரிபாலிப்பது என்பதைப் பற்றிச் சில குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன. பால் கொடுப்பது, குளிப்பாட்டுவது, ஆடையணிவது இந்த நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் குழந்தை நன்கு தூங்கவேண்டும். பாலூட்டுவது மணிக் கணக்கில் இருக்க வேண்டும். நாலு மணி நேரத்துக்கு ஒரு முறையோ அன்றி மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறையோ, டாக்டர் சொல்கிறபடி பாலூட்டவேண்டும்.

நாலு மணி நேரத்திற் கொரு முறை பால் குடிக்கும் குழந்தையை பகல் ஒன்பதரை மணிக்கும், மூன்று மணி நேரத்திற் கொரு முறை பால் குடிக்கும் குழந்தையை பதினொன்றரை மணிக்கும் குளிப்பாட்டுவது நல்லது.

நல்ல திறந்த வெளியில், மெல்லிய காற்றுப் படும்படியாகக் குழந்தையை வைத்திருக்க வேண்டும். குளிப்பாட்டும்போது கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள்: நாசித் துவாரங்களையும் காதுகளையும் முதலில் சுத்தமான பஞ்சைத் திருகிவிட்டு சுத்தப் படுத்த வேண்டும்; பின், கண்களை லேசான வெந்நீரில் தோய்த்த பஞ்சால் துடைத்து சுத்தஞ் செய்ய வேண்டும்; தாயின் முழங்கால் மீது குழந்தையைக் கிடத்தி, ஸோப் போட்டு நன்கு கழுவவேண்டும். முதலில் தலையையும் பின்னர் உடல் முழுமையும் தேய்த்துக் கழுவ வேண்டும்.

குழந்தை வளர்ப்பில் மிக முக்கியமானது, அதன் எடையைக் கணக்கிட்டு வருவது. அதன் வளர்ச்சிக்குச் சரியான அறிகுறி அதன் எடைதான். வாரத்திற்கு ஒரு முறை, அதுவும், ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஒரே தராசில், எடைபார்த்து குறிப்பிடுவது நல்லது. ஆறு மாதமானபிறகு, இரண்டு வாரத்திற்கொரு முறையும், ஒரு வருஷத்திற்குப் பிறகு, மாத மொருமுறையும் நிறுத்துப் பார்க்கலாம். சாதாரணமாக வாரம் நாலு முதல் ஆறு அவுன்ஸ் வரை எடை அதிகரித்துவரும். ஆறு மாதமான குழந்தை, பிறந்த போது இருந்ததைப் போல் இருமடங்கு எடையும், ஒரு வருஷக் குழந்தை மூன்று மடங்கு எடையு மிருக்கும்.

## எப்பொழுது நடக்கும்?

சகுனத்தடை இருக்காது. விபசாரம் குறையும். பெண்களில்லாததால் இளைஞர்கள் திருமணமின்றி ஏங்கவேண்டியதில்லை. விதவைகளின் பணத்தை "பெரியவர்கள்" கபளீகரம் செய்ய மாட்டார்கள்? புஷ்பத்துக்கு நல்ல கிராக்கி. வெள்ளைத் துணி விற்பனைக்குறைவு. பிள்ளை கூட்டி சீரழியும் தொல்லை மாயும். பெண்கட்கு நிம்மதியான வாழ்வு. சண்டை சச்சர்வுகள் தொலையும். கண்ணீரும் கம்பலையுமாயிருக்க வேண்டியதில்லை. வீட்டில் சந்தோஷம். விதவையைப் பாதுகாக்கும் வேலையில்லை. பெற்றோருக்கு மன நிம்மதி. பிள்ளை யில்லாக் குறை நீங்கும். சொந்தப் பிள்ளையைக் கொஞ்சி உண்மையான இன்பத்தை அனுபவிக்கலாம்.

இவைகள் எப்பொழுது ஏற்படும்? இஷ்டப்படுகிற எல்லா விதவைகட்கும் மறுமணம் செய்துவிடுவது; இனிமேல் பால்ய விவாகம் செய்யாமலிருப்பது? அப்பொழுது தான்.

(ப. நீ.)

---

# :: நிகழ்ச்சிகள் ::

### ரங்கூனில் பெண் போலீஸ்

டிராம், பஸ் பாதைகளில் படுத்துக் கொண்டு மறியல் செய்யும் ஸ்திரீகளைக் கலைக்க, ரங்கூனில் பெண் போலீஸ் படை திரட்டப் பட்டிருக்கிறது.

### கோச்சியில் இளமை மணத் தடை

18 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்களுக்கும் 14 வயதுக்குக் கீழ்ப் பட்ட பெண்களுக்கும் கல்யாணம் நடத்துவதைத் தடுக்க, கொச்சி சட்டசபையில் ஸ்ரீமதி தங்கம்மா யன். மேனன் ஒரு மசோதா கொண்டுவரப் போகிறார்.

### ஸ்திரீ முனிசிபல் கமிஷனர்

வட இந்தியாவிலுள்ள சாகிப் கஞ்ச் முனிஸிபாலிடியில் ஸ்ரீமதி பிரதியா மாலுக் பி. ஏ., பி. டி. கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவில் முதன் முதல் இப்பதவி வசிக்கும் பெண் மணி இவர்தான்.

### விவாக ரத்துக்கு ஆதரவு

மத்திய சட்டசபையில் ஹிந்து ஸ்திரீகள் விவாகரத்து உரிமை மசோதா கொண்டுவரும் டாக்டர் தேஷ்முக் வெளியிட்டுள்ள அறிக்கையில் பம்பாய் மத்தியமாகாணம், சிந்து, பீஹார் கவர்ன்மெண்டுகள்

மசோதாவை ஆதரித்திருப்பதாயும், வங்காள, ஒரிஸ்ஸா, எல்லேப்புற மாகாண கவர்ன்மெண்டுகள் எதிர்த்திருப்பதாயும் தெரிவித்திருக்கின்ருர். இதர கவர்ன்மெண்டுகள் இன்னும் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வில்லே. கிடைத்துள்ள அபிப்பிராயங்களில் 100க்கு 60 ஆதரவாகவும், 20 எதிராகவு மிருப்பதாயும் தெரிவித்திருக்கிருர்.

## ஸ்திரீ நிருபர்

பீஹார் சட்டசபை நடவடிக்கைகளை ஹிந்தியில் ரிப்போர்ட் செய்ய குமாரி சாரளா தேவியை அம்மாகாண கவர்ன்மெண்டார் நிருபராக நியமித்திருக்கின்றனர். இந்த உத்யோகம் வகிக்கும் முதல் இந்திய ஸ்திரீ இவர்தான்.

## காஷ்மீரத்தில் பலதார மணத்தடை

காஷ்மீர அஸம்பிளியில் பலதார மணத்தடை மசோதா ஒன்று கொண்டுவரப் போவதாக ஒரு மெம்பர் அறிவித்திருக்கிருர். ஒரு மனைவியிருக்கும் போது இன்னெரு மனைவியை மணஞ் செய்பவருக்கு மூன்று வருடக் கடுங்காவல் தண்டனையும், 500 ரூபாய் அபராதமும் விதிக்க இம்மசோதா அதிகார மளிக்கிறது.

## கிழவரை மணக்க மணப்பெண் மறுப்பு

அம்பாலாவுக் கருகிலுள்ள ஒரு கிராமத்தில் 15 வயதுப் பெண்ணை 50 வயது பணக்காரக் கிழவருக்கு மணமுடிக்க நிச்சயிக்கப்பட்டிருந்தது. "வெட்க மில்லாமல், உம்முடைய பேத்தியாக இருக்கத் தகுந்த என்னை மணக்க வந்தீரே" என்று மணப்பெண் கிழ மாப்பிள்ளைக்குச் சூடாகப் பதில் அனுப்பினாளாம். பெற்ருேர் நயமாகவும் பயப்படுத்தியும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்தக் கிழவரை மணக்க முடியாதென்று பிடிவாதமாகச் சாதித்து விட்டாள்.

## ஸ்ரீமதி ஸி. சரஸ்வதிபாய்

அயோத்யை ஸம்ஸ்கிருத காரியாலத்தைச் சேர்ந்த ஸ்ரீ காசி சமஸ்கிருத வித்யா மந்திரத்தில் ஸ்ரீராம நவமியன்று நடந்த அகில பாரத வித்வான்களுக்குப் பட்டமளிக்கும் மகோத்ஸவத்தில் மதராஸ் "கீர்த்தனகண்டீரவ" ஸங்கீத ரத்னம் ஸ்ரீமதி சி. ஸரஸ்வதிபாய் அவர்களுக்கு ஸமஸ்கிருத விசாரதா என்னும் கௌரவப்பட்டமளிக்கப்பட்டது.

## காதலுக்காக தீக்ஷை வளர்க்கிருர்

கல்கத்தாவில் மோட்டார் விற்பனைக்காரராக வேலே பார்க்கும் ஒரு யுவர் தம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பெண் தம்மை விவாகஞ் செய்துகொள்ள மறுப்பதால் அவள் தனது தீர்மானத்தை மாற்றித் தன்னை மணப்பதாக வாக்குறுதி அளிக்கும் வரை தனது மயிரை வெட்டாமல் தீக்ஷை வளர்க்கப்போவதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிருர். எற்கெனவே அவரது தலைமயிர் நீளமாகஇருக்கிறது. இப்படி யிருப்பினும் அவர் தமது பிரதிக்ஞையை நிறைவேற்றத் தீர்மானங் கொண்டிருக்கிருர். அவ் வாலிபரது தோழி அழகிய கோவாயளி யுவதியாவாள். அவள் தனது

காதலனது தீர்மான சமிக்ஞையால் மனமிளகி யிருப்பதாகத் தோன்ற வில்லை. அவள் கூறுவதாவது:— நான் அவரை விரும்புகின்றேன். ஆனால் அவர் தமது தலைமயிர் இடுப்புவரை வரும்படி வளர்த்தால் கூட நான் அவரை மணக்கமாட்டேன்.

## 64க்கு 13

திருநெல்வேலி ஜில்லா, வண்ணார் பேட்டையில் வக்கீல் தொழில் நடத்திவருபவரும், ஏற்கனவே முதல் விவாக மூலமாய் ஒரு மனைவியை யுடையவரும் சுமார் 64 வயதுள்ள ஸ்ரீ வி. வி. சீனிவாசாச்சாரியாருக்கும் ஸ்ரீவில்லி புத்தூர் தாத்தாச்சாரியார் குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 13 வயதுள்ள ஒரு பெண்ணுக்கும் ஏப்ரல் 6வ காலை மதுரைக்கு சுமார் 8 மைலுக்கப்பாலுள்ள திருமூகூர் ஸ்ரீ காளமேகப் பெருமாள் ஸந்நதியில் விவாகம் நடப்பதாக சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் மதுரை நகரிலுள்ள பிரபல காங்கிரஸ் காரர்கள் வெகுதூரம் காலில் விழுந்து தயவாக மன்றாடி மேற்படி சதிபதிகளது இரு கோஷ்டியாரையும் மேற்படி விவாகம் இத்தனை வயது வித்தியாசத்தில் நடத்துவது தர்மமோ நீதியோ ஆகாதென்று கேட்டுக் கொண்டதன் பேரில் விவாகம் நின்றது; மணமகனாகிய 64 வயது ஆச்சாரியரிடம் காங்கிரஸ் காரர்கள் தாம் இனி இவ்வளவு இளம்பிராயப் பெண்ணையோ மற்ற இதுபோன்ற வயதுப்பெண்களையோ விவாகஞ் செய்துகொள்ளக்கூடா தென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க அன்னாரும் சமாதானத்துடன் அவ்வாறு ஒத்துக்கொண்டு ஊர் சென்றதாயும் கூறப்படுகிறது. அந்தப் பெண் மதுரைக்கு வந்ததும் இத்தனை வயது மாப்பிள்ளையை நான் கலியாணம் பண்ணிக் கொள்ள மாட்டே னென்று கண்ணீர் விட்டு அழுதாள்.

## ஸ்திரீகள் மகாநாடு

அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டு சென்னை த்தொகுதியின் ஆதரவில் எழும்பூர் பாந்தியன் தோட்டத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாச் சாரியார் தலைமை வகித்தார். ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி வார்சு உரிமைகளும் ஹிந்து விவாக சீர்திருத்த மசோதாக்களும், என்ற விஷயத்தைப்பற்றிப் பேசுகையில், சட்டம் சம்பந்தமாகவும், சமூகத்திலும் ஸ்திரீகளுக்குள்ள குறைகளைத் தீர்ப்பதற்கே இச்சங்கங்கள் வேலை செய்து வருகின்றன வென்றும், சமூக அநீதியையும் சமத்துவமின்மையையும் ஒழிப்பதற்குச் சட்டம் செய்யப்படவேண்டியது அவசியமென்றும், இப்பொழுது ஸ்திரீகளுக்கு சரி சமத்துவமான வார்சு உரிமைகள் இல்லை.யென்றும், சொத்தில் அவர்களுக்குப் பங்கு கிடையாதென்றும், இது சம்பந்தமான சீர்திருத்தத்தைச் சர்க்கார் செய்ய வேண்டுமென்றும், சிசு விவாகத்தைத் தடுக்க வேண்டுமென்றும், ஸ்திரீகளுக்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்வம் வேண்டாமென்றும் எடுத்துரைத்தார்.

ஸ்ரீமதி அம்புஜம்மாள் பேசுகையில் நாகரீக முன்னேற்ற மடைந்த இந்த நாட்களில் ஒரு மனைவியிருக்க இன்னொரு மனைவியையோ

மனைவிகளையோ விவாகம் செய்து கொள்வது ஏற்காதென்றும், ஆகவே இது சம்பந்தமாகப் பெண்கள் கிளர்ச்சி செய்வதில் தவறில்லையென்றும், பெண்ணிருக்க பெண் கொடுப்பதும் பெண்ணிருக்க பெண் கொள்வவதும் நியாயமில்லை யென்றும் எடுத்துக்கூறினர்.

ஆடவருக்கும் ஸ்திரீக்கும் சரிசமத்வமான சன்மார்க்க நெறியே இருக்கவேண்டு மென்றும், சன்மார்க்க நெறி சம்பந்தமாக ஆடவருக்கு ஒரு சட்டம் பெண்களுக்கு ஒரு சட்டமிருக்கக் கூடாதென்றும் ஸ்ரீமதி வி. டி. லக்ஷ்மி எடுத்துரைத்தார்.

பிறகு கனம் ராஜாஜி பேசியதாவது:—ஆடவர் போன்று ஸ்திரீகளும் ஒவ்வொரு விஷயத்தையும் சரிசமத்வமாகக்கையாளுவது மெச்சத்தக்கது. நமது சகோதரிகள் எல்லாப் பொது விஷயங்களிலும் கலந்து கொள்வதால் மனதுக்கு சந்தோஷமும் திருப்தியும் ஏற்படுகின்றது.

## காலித்தனத்தைப் போக்க கலியாணம்!

ஸயாம் தேசத்தில் 30 வயதுக்கு மேல்பட்ட பெண்கள் கலியாணமாகாமல் கன்னிகைகளாக இருக்கப்படாதாம். அப்படி இருந்தால் உடனே அதை சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். சர்க்கார் தண்டித்த பல பிரம்மசாரிக் குற்றவாளிகளிலிருந்து அப்பேர்ப்பட்ட பெண்களுக்குப் புருஷன் தேர்ந்தெடுக்கப்படுவானும். என் தெரியுமா? குற்றம் செய்த பிம்மசாரிகள் திருந்துவதற்குச் சரியான வழி கலியாணம்தான் என்று அங்கே நம்பப்படுகிறது. கலியாணமாகாத ஒரு கன்னிகையை ஒரு குற்றவாளிக்கு அறிமுகப்படுத்துவார்கள். கைதி அற்ப குற்றமே செய்திருந்தால் அவன் தனக்கு மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் கொஞ்சம் சலுகை காட்டப்படும். ஆனால் கைதி பல குற்றங்கள் செய்தவனு யிருந்தால் அவனை மணக்க இஷ்டப்படும் அந்தப் பெண்ணை அவன் மறுக்க முடியாது. கட்டாயம் மணம் புரியத்தான் வேண்டுமென்பது கட்டளை. இம்மாதிரி சந்தர்ப்பத்தில் பெண்ணுக்கு அவனைப் புருஷனுக அடைவதில் தடை யேதாவது இருக்கிறதா என்று கூடப் பார்க்கமாட்டார்கள்; ஆயினும், அனுபவ பூர்வமாகப் பார்க்கப்போனல் பெண் மூர்த்தன்யமாய் மறுக்கும் புருஷனை அவள் மணக்க நிர்ப்பந்தப் படுத்தப்படமாட்டாள்.

## வரதக்ஷிணைக்குத் தடை

சிந்து அஸம்பிளியில் டாக்டர் ஹேமானந்தா கொண்டுவந்திருக்கும் வர்தக்ஷிணை எதிர்ப்பு மசோதாவைப் பரிசீலனை செய்த பொறுக்குக் கமிட்டி, தனது யாதாஸ்தில், எல்லா சன்மானங்களும் சேர்ந்து ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்படும் வரதக்ஷிணை 500 ரூபாய்க்கு மேல் போகக் கூடாதென்று ஏகோபித்து சிபார்சு செய்திருக்கிறது. மீறுகிறவர்களுக்கு ஒரு மாதச் சிறைவாசமோ, ஆயிரம் ரூபாய் அபாரதமோ அல்லது இரண்டுமோ விதிக்கலாமென்ற பிரிவு கட்டாயம் இருக்கவேண்டுமென்று கமிட்டி அபிப்பிராயந்தெரிவித்திருக்கிறது.

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

## கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபால் செலவு வேறு.

## மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபால் செலவு வேறு.

## சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையாக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபால் செலவு வேறு.

## அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபால் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. NO. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினால் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் எழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0. தபாற் செலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனாவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமண பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

| | |
|---|---|
| விலை பென்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.